தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-[illegible]

மலர் 4 | சென்னை | 28-9-57 | சனிக்கிழமை | இதழ் 18

கா.சீ.க.வுக்கு ஒரு யோசனை

இவ் வாரக் கடைசியில் கா. சீ. க. வின் பூர்வாங்க மாநாடு மதுரை நகரில் கூட இருக்கிறது. மாநாட்டுச் சுவரொட்டிகளைப் பார்க்கும்போது காங்கிரசுக்கும், கா.சீ.க. வுக்கும் துளியும் வேறுபாடு இருப்பதாகத் தெரியவில்லை. பச்சையும், வெள்ளையும், பளிச்சென்ற சிவப்பும் பின்னிப் பிணைந்து சுவரொட்டிகளை நிரப்பியிருக்கின்றன. தொண்டர்களுக்கு விடுத்திருக்கும் அழைப்பிதழ்களில் 'தண்டிக்குச் சென்றதைப்போல் - வேதாரண்யத்திற்கு நடந்ததுபோல் - நவகாளிக்கு ஓடியதுபோல்-வருக! வருக!' - என்று அழைத்திருக்கிறார்கள். இவைகளைப் பார்க்கும்போது, இவர்களது அமைப்பும் மாநாடும், பாணன் ஒருவன், ஒரே இசையில் பல குரல்களில் பாட நினைப்பது போல் நமக்குப் படுகிறது. கட்சியின் பெயரே காங்கிரஸ் சீர்திருத்தக் கட்சி என்கிறார்கள். காங்கிரசிலே புரையோடிப்போயிருக்கும் புன்மை எண்ணங்களை அறவே நீக்கிவிட்டு, நாட்டுக்கும் காலத்திற்கும் ஏற்ற வகையில் புதிய திட்டங்களையும் கொள்கைகளையும்தான் கா. சீ. க. வினர் வகுப்பார்கள் - வகுக்க வேண்டும் என்றுதான் காங்கிரஸ்காரர்களில் பெரும்பாலோர் எதிர்பார்ப்பார்கள் என்று நினைக்கிறோம். அவ்வாறு அவர்கள் செய்தால்தான் கா. சீ. க. என்று அவர்கள் தங்கள் அமைப்புக்கு பெயர் ஏற்படுத்தியிருப்பது பொருத்தமானதாக இருக்கும். இல்லாவிட்டால், தேனீயில் நடைபெற்ற காங்கிரஸ்காரர்கள் பேசிக் கொண்டதைப் போல், 'காங்கிரசிலிருந்து சிலர் விலகிய பின் காங்கிரஸ் சீர்திருந்தி விட்டது' என்ற வரட்டுப் பேச்சே மெய்யாகிவிடக் கூடும். மதுரையில் கூடும் 'தேச பக்தர்'கள் இதை மறந்துவிடக் கூடாது.

கா. சீ. க. அமைப்பு ஏற்பட்டதிலிருந்து பலர் பல விதமான கருத்துக்களை நாட்டிலே பரப்பினார்கள். இன்னும் அந்தக் காரியத்தையே பலர் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆதாரத்திற்காக எடுத்துக் காட்டப்படும் சிறிய தவறு; மிகப் பலரை நம்ப வைத்துவிடுதுண்டு.

கா. சீ. க. அமைப்பு ஏற்பட்டவுடன், 'இவர்களுக்கு காங்கிரசைப் புனிதப்படுத்தும் நோக்கமில்லை; காங்கிரசிலே அபேட்சகராகப் பொறுக்கி எடுக்காததாலே உருவாக்கப்பட்ட வெறும் எதிர் முகாம் தான்' என்றார்கள். கா. சீ. க. வுக்கு உள்ளே எந்த விதமான எண்ணமிருந்தாலும் எதிரிகள் எடுத்துக் காட்டிய காரணம் நம்பத் தகுந்ததாக இருந்தது. நம்பினார்கள்! தேர்தலுக்கு ஓராண்டு காலத்திற்கு முன்பே, ஏதாவது வேறு காரணத்தை முன் வைத்து கா. சீ. க. அமைந்திருக்குமானால் இன்றைய தினம் கா. சீ. க. வின் நிலையே வேறாகத்தான் இருந்திருக்கும். கட்சி அமைத்ததற்கான காரணம் திருப்தியற்றதாக இருப்பதால்தான் மாற்றுக் கட்சிக்காரர்கள் கா. சீ. க. வை எடைக் குறைவாக மதிக்கிறார்கள். அதில் தவறில்லை. அவர்களின் கருத்துக்களையும் காட்டுகின்ற காரணங்களையும் படித்த பிறகு - கேட்ட பிறகு நமக்கு எழுந்த ஐயங்களை, கட்சியின் பூர்வாங்க மாநாடு நடைபெறும் காலத்தில் அவர்கள் முன் வைக்கிறோம்.

மதுரையில் கூடும் மாநாட்டில் கா. சீ. க. வின் கொள்கைகள் வரையறுக்கக் கூடும்; கொடி நிர்ணயிக்கப்படும்; சட்டதிட்டங்கள் உருவாக வழிபிறக்கும் - என்றெல்லாம் அரசியல் வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுகிறது.

ஆனால் நாம் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புவதும், அவர்களிடமிருந்து அறியவிரும்புவதும், கா.சீ.க. அகில இந்திய ரீதியிலே விளங்கப் போகிறதா, தமிழ் நாட்டு எதிர்க் கட்சிகளில் ஒன்றாக விளங்குமா என்பது தான். பல ஒட்டுகள் நிறைந்த அகில இந்தியா என்ற சங்கிலித் தொடரில் நாங்களும் ஒரு கண்ணியாக இருக்கத்தான் விருப்பப்படுகிறோம் என்று கா. சீ. க. வினர் கருதுவார்களாயின்...... உறுதிப்படுத்திக் கொள்ளலாம் கா. சீ. க. தமிழகத்தில் இயங்குவதற்கு வழியில்லாது போய் விடும். துளியும் [illegible] திராவிட இயக்கத்தை[illegible], வேறு எந்தக் கட்சியை எடுத்துக் கொண்டாலும், அதன் தலைவர்களெல்லாம் 'ஹை' மொழி பேசும் வடவர்களாகத்தானிருக்கிறார்கள். அகில இந்தியாவுக்ும் தலைவராக ஒரு தமிழரை நாம் பார்க்க முடியவில்லை. அந்த வகையில் கா.சீ.க.வும் அங்கம் வகித்துவிடக் கூடாது என்று அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். [illegible]குத் தெரியாத தூரத்தில் - காலத்திற் கொவ்வாத நடையுடையில் திளைத்திருக்கும் ஒரு வடநாட்டுப் பேர்வழி தலைவராக இருந்தால் தான் [illegible] அர்த்தக் சட்சிக்கு [illegible] தமிழ்நாட்டில் பு[illegible]முண்டு, மதிப்புண்டு, ஆதரவுண்டு என்ற [illegible] யாலாகாத ஆசை, பேரறிஞர் அண்ணா அவர்களின் காலத்[illegible] தோடு மடிந்துவிட்டது என்பதை [illegible] இந்த நேரத்தில் கா. சீ. க. மறந்துவிட [illegible] மில்லை!

காலத்தை குற்றமற்ற நீதிப[illegible] என்பார்கள். நேற்றையச் செய[illegible]கள் இன்றைய தினம் தவறுக[illegible] படுகிறது. காலம் அப்படி வள[illegible]கிறது. இந்த நேரத்தில் கட்சி[illegible]குக் கொள்கை வகுக்க முனை[illegible]வோர் மிக எச்சரிக்கையா[illegible] இருக்கவேண்டும். சட்டப் புத்[illegible]த்திற்குப் பக்கத்தில் பூமி [illegible] வரலாற்றை வைத்துக்கொள்[illegible]ளும் காலத்தில் கா. சீ. க. கூ[illegible] கிறது. எச்சரிக்கிறோம். கொள்கை அமைப்பில் அதிகா[illegible]

— 10 ம் பக்கம் —



இதுதான் திராவிடநாடு

பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரையார் எம்.ஏ., எல்.டி.

கிழக்கு கீழ் நிலம், தாழ் நிலம்-கோதாவரியும் கருணையும், காவிரியும் பொருநையும், பாலாறும் வைகையும் வங்கக் கடல் சென்று வீழும் திசை! மேற்கில் மேலே, வானோக்கி உயர்ந்த மேலை மலைத்தொடர ளாவி அது கடந்து அரபிக்கடல் வரை அது பரந்திருந்தது. வடக்கு வண்மையுடன் விந்த மலைக்காடுகளும் கடத்தற்கரும் மேட்டு நிலங்களும் உடைய விரிந்த எல்லை! தெற்கு தென்னுதற்கு உசவும் நெய்பு கோல் போல, நுணுகி ஒரு முனையாய்க் குமரியில் சென்று நிற்பது!

மொழியிலே, தமிழ் மொழியில் திசைகளுக்கு அமைந்த சொற்களிலே எல்லை காட்டி, மொழி எல்லையே இன எல்லையாக, இனஎல்லையே நாட்டெல்லையாக, நாட்டெல்லையே பண்பாட்டின் அக எல்லையாகக் கொண்ட நானிலம், ஐந்திணை அளாவிய முழு நிலம் பண்டைத் தமிழகம், இன்றைய தென்னாடு-இதுதான் திராவிடம்!

கங்கை சிந்துவெளிகள் நிலவுலகில் தோன்றுவதற்குப் பல்லாயிர ஆண்டுகளுக்கு முன், அந்த ஆறுகளும் அவற்றுக்குரிய பிறப்பிடமான இமயமலைத் தொடரும் கடலாக அலை பாய்ந்து கொண்டிருந்த காலத்தில் இன்றைய ஆசியா, ஐரோப்பா, அமெரிக்கா, ஆபிரிகா, ஆஸ்திரேலியா ஆகிய கண்டங்களே உருவாவதற்கு முன், மனிதனும் மனித நாகரிகமும் முதலில் பிறந்த கன்னி மாநிலம் இது! இயற்கையின் முதல் நிலவுலகக் குழந்தை-உலகுடன் பிறந்து உலகுடன் வாழும் நிலவுலக மையம் - நாகரிகத்தின் பிறப்பிடம், வளர்ப்புப்பண்ணை மேகலம் திராவிடப் பெருங்குடி மக்கள் வாழும் இத்திருவிடமே!

நிலவுலகம் இன்றைய வடிவமடைந்த பின்னும், இன்று உலகில் வாழும் நாடுகள், இனங்கள், மொழிகள் பிறக்குமுன், அவற்றின் பெயரை வரலாறு அறிவதற்கு நெடுநாள் முன்னரே வளம்பெற்றுப் புகழ் நிறுவிய மாண்ட இனங்கள் பல. அந்த மாண்ட இனங்களுக்குமுன் பிறந்து, அம்மாண்ட இனங்களுடன், அவற்றின் பல தலைமுறைகளுடன் கூடிக்குலாவி, அவற்றுடன் கலைத்தொடர்பும் வாணிகத் தொடர்பும், குடியேற்றத்தொடர்பும் அரசியல், சமுதாயத் தொடர்பும், நாகரிகத் தொடர்பும் கொண்டு பின் அம்மாண்ட இனங்கள் அழிந்த பின்னும் அவற்றின் தூதுவராகி இன்றைய உலகின் புதிய இனங்களிடையேயும் பொன்றாது வாழும் காலங்கடந்த கடவுள் நிலம்! இதுவே இன்று நிலவும் இனங்களின் வாழ்வு கடந்தும் வருங்கால உலகின் அவாவாய் இன்னும் காலங்கடந்து, உலகின் கனவார்வங்களைத் தன் கருவில் கொண்டு பேணும் கரு நிலமாய் இயங்கும் எழிலார்ந்த தாய்மை நிலம் இவ்வாழ் நிலம் என்னலாம்.

இரண்டாயிர ஆண்டுகளுக்கு முன் நிலவுலகாண்ட உலகப் பெரும் பேரரசு உரோமகம். மாமன்னர்களும், அதன் மணிமுடி தாங்கிய அரசியரும், இளங்கோக்களும், நாகரிக உயர்குடி நங்கையரும் தமிழகத்தின் முத்துக்களுக்கு, பொன் அணி மணிகளுக்கு, மெல்லிய ஆடைகளுக்கு, மணச்சுவைப் பொருள்களுக்கு ஏங்கித் தவம் கிடந்தனர். அவற்றைப் பேணத்தம் பேரரசின் பெருந்திறைச் செல்வம் முழுதும், தம் தம் பட்டசாலையில் அடித்த பொன்னுணயங்களத்தனையையும் புதிது புதிதாகக் கொட்டியளந்தனர். அவர்களுக்குமுன் ஆயிர ஆண்டுகளாகக் கலையாட்சி செய்த யவனர் அல்லது கிரேக்கர் தமிழகத்திலிருந்து அரிசியும் சர்க்கரையும், அகிலும் சந்தனமும், தேக்கும் யானைத் தந்தமும் பெற்று, இப்பொருள்களுக்குரிய தமிழ்ப் பெயர்களையே தம் மொழியிலும் மேலை மொழிகளிலும் வழங்கச் செய்துள்ளனர்!

பெண்களே வீரராகவும் ஆட்சியாளர்களாகவும் விளங்கிய கன்னி நாடு 'தமிரிகா' என்று, அவர்கள் தமிழகத்தைப் போற்றினர். அக்கால நாகரிக உலகின் மையமாய், வாணிகக் களமாய், கீழை யுலகின் கலங்களும் மேலையுலகின் கலங்களும் வந்து கூடும் உலகக் கடல் தளமாய் விளங்கிய மரக்காணம், மல்லை, பொதுசா அல்லது புதுச்சேரி என்னும் பாண்டிச்சேரி, காவிரிப்பூம்பட்டினம், சோழன் தொண்டி, கொற்கை, மேல் கரை முசிறி (தற்காலத் தென் கன்னட மாவட்டத்திலுள்ள மங்களூர்) முதலிய துறைமுகங்களைப் பற்றியும், அவன்றின் வளங்களைப் பற்றியும் கிரேக்க வரலாற்று ஆசிரியரும் நில்நூல் ஆசிரியரும் பலபடப் புகழ்ந்து பாராட்டியுள்ளனர்.

யவன வீரரும் வடஆரிய எழில் நங்கையரும் புத்தாக்கம் தேடி இப்புகழ் நில வேந்தரான சேர சோழ பாண்டியரிடமும் குறுநில மன்னரிடமும் அரண் காவலராகவும், மனைகாவலராகவும், ஏவலராகவும், பணிநங்கையராகவும் இடம்பெற்று வாழ்ந்தனர். யவன உரோமகப் பேரரசர் பாண்டியருடன் தூதுறவும் நேச உடம்படிக்கையும்கொண்டு தம் வலிமை பெறுக்கினர்.

உரோம கிரேக்க நாகரிகங்கள் பிறப்பதற்கு ஆயிர மூவாயிர ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மேலைவுலகநாகரிகத்தின் தலையூற்றுய் அமைந்த நாடு எகிப்து. அந்நாட்டவர்கள் தம் நாகரிகத்தின் மூலஉயிர் முதல்நிலம் 'பண்ட்' என்றும் போற்றினர். இது பாண்டி நாடே என்பர் திராவிட ஒப்பியல் மொழி நூலின் தந்தையாகிய நல்லாயர் கால்டுவெல். அப்'பண்ட்' நிலம் பொன் விளையும் நாடு என்றும், அதில் அந்நாளைய பெருந்துறைமுகம் 'ஓபிர்' என்றும் அவர்கள் தம்ஏடுகளில் குறித்தனர். இத்துறைமுகம் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள 'உவரி'யே என்றும் நல்லாயர் கால்டுவெல் கருத்துரைத்தார்.

மூவாயிர, நாலாயிர ஆண்டுகளுக்கு முற்பட்ட அந்நாட்களிலிருந்தே, இன்றைய கோலாறும் குடகு நாடும், காவிரி அல்லது பொன்னிக்கரையும், வைகைக் கரையும் பொன் விளையும் நிலங்களாய் இருந்தன என்பதைச் சங்க இலக்கியங்களும் சிந்து வெளி நாகரிகச் சின்னங்களும் குறித்துக்காட்டுகின்றன. திப்பு சுல்தான் காலம் வரை இப்பொன் வளத்துக்காகவே குடகு நாட்டையும் அது சூழ்ந்த கொங்கு நாடு எனும் மேட்டு நிலத்தையும் கைக்கொள்ளப் பல தென்னாட்டு அரசர்கள் கடும் போரிட்டுள்ளார்கள். அசோகன் கூட இப்பொன்னுக்கு ஆசைப்பட்டே தெற்கே படையெடுப்புகள் பல நடத்தித் தோல்வியுற்று, அத்தோல்விகளின் அவமதிப்பை மறைக்கவே புத்தமதஞ் சார்ந்து துறவு பூண்டானென்று வரலாறு கூறுகின்றது.

எகிப்தியருடன் பழமையிலும் பெருமையிலும் போட்டியிட்டு, கடலாட்சியிலும் நாகரிகத்திலும் அவர்களை நெடுந்தொலை விஞ்சி நின்றவர் பினீசியரும், யூதரும், சால்டியரும், சுமேரியரும், ஏலமியரும், சிந்து வெளி மக்களும் ஆவர். அவர்களனைவருடனும் நாலாயிர, ஐயாயிர ஆண்டுகளுக்கு முன்னிருந்தே வாணிகத் தொடர்பும் கொண்டிருந்தனர் தமிழர்! சுமேரிய, சிந்து வெளி நகரங்களில் தமிழர், தமிழ் வணிகரும் கடலோடிகளும் உலவினர். அந்நாடுகளின் நாணயங்கள் தமிழகத்திலும், தமிழகத் தங்கம் அந்நாடுகளிலும் காணப்படுகின்றன. தேக்கு, சந்தனம், யானைத் தந்தம், மணப்பொருள்கள், குரங்குகள் இவற்றைத் தமிழ

— 11-ம் பக்கம் —

தமிழின் தனிச்சிறப்பு

"தமிழ், புதிய சொற்களை உருவாக்கும் வேர்ச் சொற்களைக் கொண்டது. ஒரே சொல்லுக்கு பலவித உணர்ச்சிக் குறிகளைக் காட்டும் தன்மையும் தமிழ் மொழிக்குத்தான் உண்டு. உதாரணமாக, 'வா!' என்று தந்தை மகனை அழைக்கலாம்.

"அதேபோல் கணவன் மனைவியை அழைக்கலாம்; முதலாளி வேலைக்காரனைக் கூப்பிடலாம். தூரத்தில் இருப்பவர்களையும் 'வா!' என்று அழைப்பதுண்டு.

"ஆனல் 'வா!' என்ற ஒரே சொல் இடத்திற்குத் தகுந்தாற்போன்ற உணர்ச்சிகளையும், குணங்களையும் பெறுகிறது.

"தந்தை மகனை அழைக்கும்போது பாசமும், கணவன் மனைவியை அழைக்கும்போது அன்பும், முதலாளி வேலைக்காரனை அழைக்கும்போது அதிகாரமும் அந்தச் சொல்லில் கலந்தோடி வருகின்றன.

தூரத்தில் இருப்பவர்களை அழைக்கும்போது 'வா' என்ற சொல் இதயத்தின் அடித்தளத்திலிருந்து பிறக்கிறது.

"இப்படி ஒரே சொல், பல உணர்ச்சிகளைப் பெறுவதையும், பல நாடகங்களாக மாறுவதையும் தமிழில் தான் பார்க்க முடியும்."

—மறைமலை அடிகளார் நினைவு நாள் கூட்டத்தில் நாவலர் நெடுஞ்செழியன்.

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன்!"

எண்ணம்

~ கண்ணதாசன் ~

மலர் 4 ‖ 28—9—57 ‖ இதழ் 13

திருவண்ணாமலை முடிவு!

கூப்பிடு பகைவரை! கூப்பிடு பகைவரை!
  கொத்திக் கிளறிக் கொன்றிடுவோம்!
காப்பிடு வோர்தமிழ் அன்னையின் கால்களில்
  கைகளை வெட்டிப் பங்கிடுவோம்!
சாப்படு வெங்களம் மேற்படு வோம்;எம்
  தாயகம் காக்கப் போர்புரிவோம்!
நாப்படு சொர்த்தைகள் கூறிஇ கழ்ந்தவர்
  நாவினைத் துண்டாய் கூறுசெய்வோம்!

கொற்றவர் ஆண்டது; பெற்றவர் தந்தது
  மற்றவர்க் கிங்கே ஏதுரிமை?
செற்றவர் கையில் பற்றிய நாட்டினை
  பற்றிப் பறிப்பது நம்கடமை!
கற்றவர் சொற்படி, தென்னக மாந்தர்கள்
  கலையொடு மொழியில் தனியாவார்!
தெற்றெனும் உண்மை தேருகி லாதவர்
  தென்னக மண்ணிற் பிணமாவார்!

"அன்னையும் தந்தையும் பிள்ளையும் ஒன்றாய்
  அன்பினில் ஆடிய திந்நாடே!
முன்னையர் நற்புகழ் மூட்டிவ ளர்த்தஎம்
  மூத்தவர் வாழ்ந்ததும் இந்நாடே!"
தென்னவன் பாரதி செப்பிய பாடலைச்
  சிந்தையிற் கொள்வோம் இந்நாளே!
தென்னகம், தென்மொழி, தென்னவர், தென்கலை
  செம்மையிற் காப்போம் மண்மேலே!

அன்னியர் பொருளில் ஊறிவ ளர்ந்தவர்
  ஆளுவ தோநாம் மாளுவதோ?
என்னவர் உலகில் இழிகுண வடவர்
  ஏறுவ தோநாம் ஆறுவதோ?
அன்னையர் நாட்டினில் அன்னியர் மொழியை
  ஆக்குவ தோநாம் ஊக்குவதோ?
சொன்னய மில்லா சொத்தையர் இந்தி
  தொங்கிட வோதமிழ் தூங்கிடவோ!

குதிரையைக் கூடிய கோமள வல்லிகள்
  கூடியி ருந்தது வடநாடு!
பதிமுறை காத்தனர் பத்தினிப் பெண்மையின்
  பண்புவ ளர்த்தது தென்னாடு!
அதிசயக் கடவுளர் ஆயிர மாயிரம்
  ஆகிநி லைத்தது வடநாடு!
கதிரொடு திங்களைக் கண்ணுற வாழ்த்திய
  காவியம் புகழ்வது தென்னாடு!

காதலர் கண்டதும் மேகலை வீழ்வுறும்
  காமம்வ ளர்த்தது வடநாடு!
காதலர் சண்டதும் நாணிய பெண்மையிற்
  கற்புநி லைத்தது தென்னாடு!
பேதையிற் பேதையர் ஆண்மையிற் பெண்மை
  பேணிவ ளர்த்தது வடநாடு!
நீதியைக் காத்திடப் பெண்மையில் ஆண்மை
  நெறிகள்ப டைத்தது தென்னாடு!

எவ்வழி ஓரினம்? எவ்வழி ஓர்கலை?
  எவ்வழி 'பாரதம்' ஒன்றாகும்?
எவ்வழி ஆயிரம் பண்புகள் ஒன்றாய்
  இணைவதில் 'பாரதம்' உண்டாகும்?
எவ்வழி வேங்கையும் செவ்விய மானும்
  'இந்திய ஒற்றுமை'ப் பண்பாடும்!
செவ்வழி, தமிழர் ஆந்திரர் ஒன்றாய்
  திராவிடம் காணல் நன்றாகும்!

[அங்கு நிறைவேறிய தீர்மானங்கள்-முழங்கிய முழக்கங்கள் இயவற்றின் ரத்தினச் சுருக்கம் இது.]

வால் நட்சத்திரங்கள்!

வால் நட்சத்திரங்கள் ஏன் தோன்றுகின்றன? எப்படித் தோன்றுகின்றன? - என்பது பற்றிய தத்துவம், இன்னும் திருப்திகரமாகக் கண்டுபிடிக்கப் படவில்லை. 1921 ஜூன் மாதம், இப்பரந்த பூமி பான்ஸ் - வின்னக்ஸ் வால்நட்சத்திரத்துடன் மோதிவிடக் கூடிய ஆபத்து ஏற்பட்டது; ஆனால், அந்த வால் நட்சத்திரம் சற்று முன்னதாகவே அதன் அதிசமீப இடத்தைத் தாண்டிவிட்டபடியால் ஆபத்து நேரிடவில்லை! இம்மாதிரியான ஆபத்து 150 இலட்சம் ஆண்டிற்கு ஒருமுறை சராசரியாக ஏற்படலாம். எதிர்காலத்தில், இந்த மோதுதல் ஏற்படாது என்ற நிலை இல்லை; ஆனால், அப்படி ஏற்பட்டாலும்கூட, பூமிக்குப் பாதகம் எதுவும் ஏற்படாது. ஏனெனில், வால்நட்சத்திரத்தில் அடங்கிய பொருள்கள் நுண்ணிய பொருள்களாய் இருக்கின்றன.

வால் நட்சத்திரங்கள், சூரியனின் இழுக்கும் சக்தியால் அடிக்கடி ஆகாயத்தில் காணப்படுகிற பொருள்களாகும். அவைகளுக்கு வால்போல் நீண்ட ஒரு பகுதி இருப்பதால் அவை, வால்நட்சத்திரங்கள் என்று குறிப்பிடப் படுகின்றன. அதன் ஆங்கிலப் பெயரும் ஏறக்குறைய இதே அர்த்தமுள்ளதுதான்.

ஆண்டிற்கு ஐந்து அல்லது ஆறு வீதம் இப்போது வால் நட்சத்திரங்கள் காணப்படுகின்றன. 1932-ல் தான் உச்ச எண்ணிக்கை – 13 காணப்பட்டது. சூரியக் குடும்பத்தில் சுமார் 1,20,000 வால்நட்சத்திரங்கள் இருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே, இந்தக் குடும்பத்தில் அவை தான் ஏராளமாக இருக்கின்றன.

சூரியனுக்கும் வால்நட்சத்திரத்துக்குமுள்ள தூரம் 90,000 மைலிலிருந்து கோடி மைல்கள் வரை இருக்கும். அதேபோல் அவைகளின் நடமாட்ட காலமும் மூன்றரை ஆண்டு முதல் 10,00,000 ஆண்டுவரை இருக்கும்; சராசரி காலமும் 40,000 ஆண்டுகள்!

தொலை நோக்கிக் கண்ணாடியில் முதலில் படலம் போன்ற, தெளிவற்ற உருவத்தில் வால் நட்சத்திரம் காணப்படும். பிறகு சற்றுத் துல்லியமானவுடன் மூன்று பகுதி - தலை, மூலக்கரு, வால்-தெரியவரும். தலைப்பகுதி மேகப் படலம்போல் தனி உருவமுள்ளதாய்-ஆனால் சுருக்கான விளிம்பில்லாததாய் இருக்கும். மத்தியில் இருக்கும் பிரகாசமான பகுதிதான் மூலக்கரு. அதன் வடிவம் நட்சத்திரம்போல் இருக்கும். தலைப் பகுதியிலிருந்து பிரகாசமான வால் நீண்டுகொண்டிருக்கும். உருளை வடிவமான அந்த வால் எப்போதும் சூரியனுக்கு எதிர்ப்புறமாகவே நீண்டிருக்கும்.

வால்நட்சத்திரங்களின் அளவும் பல்வேறாக இருக்கும். மூலக்கருவின் குறுக்களவு சில நூறு மைல்களிலிருந்து பல ஆயிரம் மைல்கள் வரை இருக்கும். சில சமயங்களில் தலைப்பகுதி பெரிதாக இருக்கும். வெறுங் கண்ணுக்குத் தெரிகிற வால்நட்சத்திரத்தின் வாலின் நீளம் இலட்சக்கணக்கான மைல்களாக இருக்கும்; ஆனால் சில பிரச்னைகளில் அது பூமிக்கும் சூரியனுக்கும் உள்ள தூரத்தைக் காட்டிலும் அதிகமாக இருக்கலாம்.

அந்த நட்சத்திரத்தின் வால், கதிரியக்க அணுத்துகள்களும் வாயு அணுக்களுஞ் சேர்ந்ததாக இருக்கும் சூரியனிலிருந்து வீசுகிறகதிரியக்க, சக்தி தலைப் பகுதியிலிருந்து கிளம்புகிற மின்சார எதிர்ப்புச்சக்தி, இவை காரணமாய், வால், சூரியனுக்கு எதிர்ப்புறமாகவே எப்போதும் இருக்கும்படி அமைகிறது.

வெண்பாப் போட்டி-5.

ஈற்றடி :

போட்டாளே வேலையற்றுப் போய்

முடிவு தேதி 5-10-57.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை-6.

நான் எழுத்தாளன் ஆனேன்

- 5 -

சென்ற இதழ்களில்...

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு கிராமத்தில் பிறந்தவன் அவன். அதிகமாகப் படிக்கவும் விருப்பமில்லாமல், வேலை பார்க்கவும் பிரியப்படாமல் கிராமத்தில் உலவிய 'துறவி' அவன். மாலையில் விளையாடும் நேரம்தவிர, மற்ற நேரங்களில் நிகழும் உலகிற்கும் அவனுக்கும் அவ்வளவாகத் தொடர்பு இருப்பதில்லை. கண்மாய்க்கரையை ஒட்டிய தென்னந்தோப்பே அவனது 'குடியிருப்பு.' எப்பொழுதும் பழங்காலத்துக் கவிஞர்களைப் பற்றியே அவன் சிந்தனை செல்லும். கவிதைக் கற்பனைகளையும், கண்முன் தென்படும் இயற்கைக் காட்சிகளையும் எண்ணி எண்ணிப் பார்த்து மகிழும் உள்ளம் அவனுக்கு இளம் வயதிலிருந்தே அமைந்துவிட்டது. தான் ஒரு எழுத்தாளனாகிவிட வேண்டுமென்ற கவலையே அவனை எப்பொழுதும் வாட்டியது. அந்தச் சிற்றூரிலுள்ள கடைச் சிப்பந்தியும்கூட கேலிப் பொருளாகக் கருதிய அவனை, அவனது கற்பனைதான் நிம்மதியாக உலவவிட்டிருந்தது. உலகம் தன்னை சாதாரணமானவனாக எண்ணுகிறதே என்றே அவன் கவலைப்பட்டான்.

அவனுக்குத் பழகிப் போய்விட்ட அந்த ஊர் வெறுப்பளிக்கத் தொடங்கியது. அந்தக் கிராமத்துக்கும் தனது இலட்சியங்களுக்கும் துளிக்கூடத் தொடர்பில்லை என்று அவன் கருதினான். அமைதியின் உறைவிடமாய் அழகின் சிரிப்பாய் காட்சி தந்த அந்த ஊர், அவனுக்குக் கசந்துவிட்டது. ஒரு நாள் அந்த ஊரை விட்டு அவன் வெளியேறினான்.

ஒரு சிறு பெட்டி. அதில் சாதாரண இரண்டு சட்டை, வேட்டிகள். சில பழைய புத்தகங்கள். கதை எழுதிய நோட்டுப் புத்தகங்கள். உடைந்துபோன ஒரு பவுண்டன்பேனா. - இந்தத் தனது 'சொத்து'களோடு, வீட்டில் சொல்லிக்கொள்ளாமல் அவன் புறப்பட்டான்.

முதலில் அவன் வந்து சேர்ந்த இடம் திருச்சி. முதன் முதலாக அப்போதுதான் அந்த நகருக்கு வந்த அவன், அங்கு அவனுக்குத் தெரிந்த ஒரே ஒருவரைச் சந்தித்தான். அவர் அவனுக்கு நேரில் அறிமுகமானவர்கூட அல்ல - ஊரிலிருந்து அவன் அனுப்பிவைத்த கதையைத் தனது பத்திரிகையில் பிரசுரித்தவர். அவரிடம் சிபாரிசுக் கடிதம் வாங்கிக் கொண்டு, அவன் திருச்சி முழுவதும் - வானொலி நிலையம், பத்திரிகை அலுவலகங்கள் - எங்கெல்லாமோ அலைந்தான். வேலையில் வைத்துக் கொள்ளாதது மட்டுமல்ல, அவன் தன்னை எழுத்தாளன் என்று அறிமுகப்படுத்திக் கொண்டதையேகூட அவர்கள் விரும்பியதாகக் காட்டிக்கொள்ளவில்லை. திருச்சி சீக்கிரத்திலேயே அவனுக்குச் சலித்துவிட்டது. ரயிலேறினான்—அதுவும் 'டிக்கட்' இல்லாமல்.

சென்னை அவனுக்கு 'வரவேற்புப் பத்திரம்' வாசித்தளிக்காமலிருந்தால் கூடப் பாதகமில்லை; விரும்பியபடியெல்லாம் திட்டித் தீர்த்தது! அங்கேதான் 'நான் கதை எழுதியிருக்கிறேன்' என்று சொன்ன அவனை, நையாண்டி செய்தார் கேலிச் சிரிப்புச் சிரித்தார் ஒரு பத்திரிகாசிரியர். சென்னையும் 'திருச்சி'யாகிவிட்டதே என்று அவன் திகைத்தான். அங்கு வாழ்ந்த அவனது மிக நெருங்கிய சொந்தக்காரரொருவர் கூட அவனைத் தனது அறைக்குள் நுழையவிடாதபடி விரட்டினார்.

அவனுக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் அவனது ஒரு நேரத்துப் பசியைத் தணித்தார். பசி தீர்ந்ததும் அவன் கடற்கரைக்குச் சென்றான். மாலை நேரத்தில் மட்டும் உருவாகும் அந்தத் 'திடீர் நகர'த்தின் ஒவ்வொரு அசைவுகளும் அவனுக்கு உலகத்தை விளக்கின. பரந்த அந்த இடத்தில்கூட அவனைத் தூங்க அனுமதிக்கவில்லை நிலைமை.

பல இடங்களில் அவன் வேலை தேடினான். எங்கும் அவன் பெற்ற ஒரே பதில் 'வேலை இல்லை!' கடைசியில் அவனுக்கு வேலை கிடைத்தது! அவனது ஊர்ப் பகுதியைச் சேர்ந்த பலர் மொத்தமாக ஒரு வீட்டில் வசித்து வந்தார்கள். அவர்களது சாப்பாட்டுக்கான காய்கறி வாங்குவதுதான் அவனுக்கு அப்போது கிடைத்த வேலை. வேளா வேளைக்குச் சாப்பாடு, விரித்துப் படுக்க இடம்- இது போதாதா அப்போது அவனுக்கு!

ஒருநாள் டிராம் பிரயாணத்தின்போது, ஒரு பெண் அவனுக்கு அறிமுகமானாள். எமிலி அவள் பெயர். சகோதர உணர்வோடு பழகிய அவளைச் சந்திக்கத் தினமும் கடற்கரைக்கு வந்தது காரணமாக அவனது வேலை 'சொல்லிக்கொள்ளாமல்' போய்விட்டது!

உறவினர் ஒருவரின் துணையால் திருவொற்றியூரிலிருந்த அஜாக்ஸ் தொழிற்சாலையில் அவன் ஒரு குமஸ்தாவாகச் சேர்ந்தான். அங்கே அவனுக்குக் கிடைத்த சம்பளம் வாரத்திற்கு ஐந்து ரூபாய்! வாரத்தில் ஆறு நாட்களை அங்கே கழித்த அவன், ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் தவறாமல் சென்னைக்கு வந்து சென்றான்.

★

அஜாக்ஸ் கம்பெனியின் தலைமை நிலையம் சென்னையில் இருந்தது. அதன் உரிமையாளரும் சென்னையிலேயே இருந்தார். வாரா வாரம் சென்னைக்கு வரும் அந்த 'எழுத்தாளன்' அவரைப் போய்ப் பார்ப்பான். பார்க்கும்போதெல்லாம் தன்னைச் சென்னை அலுவலகத்துக்கு மாற்றிக் கொள்ளும்படி கேட்பான். சென்னையின் இனிய சூழ்நிலையிலேயே தினமும் வாழ்க்கை நடத்த அவன் விரும்பினான். அவன் வாரா வாரம் தன்னைச் சந்திப்பதைத் தொல்லையாகக் கருதினார் அந்த உரிமையாளர். மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை அவரை அவன் சந்தித்ததும் வேலையை விட்டு நின்றுவிடும்படி கூறிவிட்டார். கொஞ்சம் கடுகடுப்பாகவும் பேசிவிட்டார். அதிர்ச்சி அடைந்த அவன், எட்வர்டு எலியட்ஸ் சாலையில் இருந்த அவரது வீட்டிலிருந்து வெளியேறினான். சென்னையிலேயே வேலையில் இருந்தால் மகிழ்ச்சியாக இருக்குமே என்ற எண்ணம் போய், இருந்த வேலையும் போய்விட்டது. கையிலிருந்த இரண்டு மூன்று ரூபாயை வைத்துக்கொண்டு, இரண்டொரு நாட்கள் சென்னையிலே சுற்றினான் அவன். திட்டமில்லாத வாழ்க்கையில் தொல்லைகள் குறைவதே இல்லை. ஆனால், திடீர் திடீர் என்று குறைவதுபோல் தோன்றிக்கொண்டே இருக்கும். அவன் மீண்டும் சென்னையைச் சுற்றினான், சுற்றினான், கால் வலிக்கச் சுற்றினான். விசித்திரமான இந்த வாழ்க்கையைப் பற்றி, அவன் ஒவ்வொரு கணமும் எண்ணிப்பார்த்தான். தினசரி பல கடமைகளை வைத்துக்கொண்டு, சுறுசுறுப்பாக இயங்கும் பலபேரை அவன் சந்தித்திருக்கிறான். காலை 6 மணிக்கு எழுந்து, பரபரப்பாகத் தொலைபேசியின் அருகில் அமரும் பெரிய மனிதர்களைப் பார்த்திருக்கிறான். முதல் தேதி கல்கத்தா; இரண்டாந் தேதி பம்பாய்; மூன்றாம் தேதி சென்னை என்று பறந்து கொண்டிருப்போரையும் கண்டிருக்கிறான். காரியம் இருக்கிறதோ இல்லையோ, மனிதர்கள் அவசர அவசரமாக நடக்கிறார்கள். அலுவலகங்களில் கூட்டம் ஏராளமாக இருக்கிறது. இவ்வளவு விறுவிறுப்பான உலகத்தில், எந்த விதமான கடமையும் இல்லாமல் நாளைக்கு என்ன வழி என்பதும் அறியாமல் அவனது வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது. மீண்டும் பசி, பட்டினி துவங்கிற்று.

நன்றாகப் பசி எடுக்கும்போது சமுதாயத்தின்மீது அவனுக்குக் கோபம் கோபமாக வரும். அவன் கையில் மட்டும் இந்த நாட்டை ஒருமணி நேரம் அப்போது ஒப்படைத்திருந்தால், பணம் படைத்த தொழிலதிபர்களைப் பழி தீர்த்துக்கொண்டிருப்பான்.

இந்த நிலையில், சென்னையில் அலைவதைக் காட்டிலும், கிராமத்திற்கே திரும்பிவிடுவது நலம் என்ற முடிவுக்கு அவன் வந்தான். எமிலியைச் சந்திக்க விரைந்தான். அங்கே அவனுக்கு இரண்டாவது ஏமாற்றம் காத்துக் கிடந்தது. எமிலி சொந்த ஊருக்குப் போய்விட்டாள். ஒரு நண்பரைப் பார்த்து, பத்து ரூபாய் வாங்கிக்கொண்டு கிராமத்திற்குப் புறப்பட்டான் அவன். இரவு முழுவதும் ரயிலில் தூக்கம் பிடிக்காமல் அமர்ந்திருந்தான். கிராமத்தின் வெளிச்சாலையில் இறங்கி ஊருக்குள் போகும்போது அவன் இதயம் படபடத்தது. எந்தக் கிராமம் வாழ்க்கைக்கு ஏற்றதல்ல என்று உதறித் தள்ளினானோ, அங்கேயே திரும்பி வந்துவிட்டான். அப்போது அவனுக்கு ஒரு உண்மை புலனாயிற்று. வாழ்க்கையில் முன்னேற்றம் காண்பதற்கு, திறமை மட்டும் இருந்து பயனில்லை; சந்தர்ப்பம் அமைவது மிக முக்கியம். தன்னுடைய திறமையில் மிகுந்த நம்பிக்கை கொண்ட அவனுக்கு, எழுத்தாளன் ஆவதற்கான சிறு சந்தர்ப்பம்கூட வாய்க்கவில்லை. சந்தர்ப்பம் என்றால் என்ன? அது தானாக வருவதா? மனிதன் உண்டாக்கிக்கொள்வதா? பெரும்பாலான நேரங்களில் சந்தர்ப்பம் திடீரென்றுதான் அமைகிறது. இந்தத் திடீர் நிகழ்ச்சி எப்படி உருவாகிறது? காரணம் புரியவில்லை. புரியாததால்தான் இது கடவுள் சித்தம் என்று முடிவு கட்டப்படுகிறது. சில நேரங்களில் மனிதர்கள் தாமே உண்டாக்கிக் கொள்ளுகின்ற சந்தர்ப்பங்களைப் பற்றி அவன் எண்ணிப் பார்த்தான். அந்த சந்தர்ப்பங்களை உண்டாக்குவதற்கு அவர்களுக்கு துணிவு மட்டும்தான் தேவையாய் இருந்

— 9ம் பக்கம் —

திருத்தம்

சென்ற இதழ் 'எண்ணம்' கவிதையில் வரி 17ல் களவு நெறி என்றிருப்பதைக் **கற்பு நெறி** என்று திருத்திக்கொள்ள வேண்டுகிறோம்.

‘ஊமையன் கோட்டை’ - துவக்க விழா !

கண்ணதாசன் தயாரிக்கப் போகும் ‘ஊமையன் கோட்டை’ படத்திற்கு ஆரம்ப விழா வியாழனன்று காலை பாரமவுண்ட் ஸ்டுடியோவில் நடந்தது. விழாவிற்கு வந்திருந்தவர்கள் அனைவரையும் கண்ணதாசன் வரவேற்றுப்பேசி, புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனை தலைமை வகிக்குப்படி கேட்டுக்கொண்டார்.

தமது தலைமையுரையில் எம். ஜி. ராமச்சந்திரன், கண்ணதாசன் உழைப்பினுல் முன்னுக்கு வந்தவர் என்றும், அவரிடம் நன்னோக்கங்களும், நல்ல குறிக்கோள்களும் உள்ளன என்றும் கூறினர்.

அவர் மேலும் பேசியதாவது: ‘கண்ணதாசன் இத்தனை நாளாக வெறும் பாடல்கள், கதை, வசனம் தான் எழுதி வந்தார், ஆனல், இப்போது தயாரிப்பாளராக முன்வந்திருக்கிருர். இவரைப் போன்றவர்கள் இப்படத் தொழிலில் இறங்குவதை நான் மிகவும் ஆதரிக்கிறேன். பணம் தனிப்பட்ட சிலரிடமே தேங்கியிருப்பதைவிட, இவரைப் போன்றவர்கள் படத் தயாரிப்பில் இறங்குவதுமூலம் பணம் பகிர்ந்து எல்லோரிடமும் பரவும். உழைப்பிற்கு மதிப்புத் தரவேண்டும். திறமை மிகுந்தவர்கள் வாழ முயற்சிக்க வேண்டும்.

நான் இந்த விழாவிற்கு வந்து கொண்டிருந்தபோது எனக்கு எட்டிய சில வதந்திகளுக்கு இங்கு விளக்கம் கூற விரும்புகிறேன்; கடமைப்பட்டவனுமாவேன். போட்டி மனப்பான்மையை அறவே ஒழித்துக் கட்டப் பாடுபடும் நான், ஒன்று சொல்ல விரும்புகிறேன், இந்த ‘ஊமையன் கோட்டை.’க்கும், ‘கட்டபொம்ம’னுக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது. கட்டபொம்மன் கதைக்கும் இதற்கும் தொடர்பு இருந்திருந்தால் நான் நடிக்க ஒப்புக்கொண்டிருக்கமாட்டேன். இது போன்ற மனப்பான்மை எங்கெங்கு துளிர் விட்டதோ ஆங்காங்கு சென்று நான் முளையிலேயே கிள்ளி எறிந்திருப்பது இங்கு உள்ளவர்கள் எல்லோருக்கும்தெரிந்ததே.

ஆகவே, எந்தச் சமயத்திலும் படத் தொழிலில் இந்த மாதிரியான ‘காப்பி’ அடிக்கும் தொழிலை நான் ஆதரிக்கமாட்டேன்’ என்று கூறி முடித்தார்.

பிறகு பேசிய பன்மொழிப் புலவர் அப்பாதுரை அவர்களும், பேராசிரியர் பரமசிவானந்தம் அவர்களும் ‘ஊமையன் கோட்டை’ தமிழகத்தின் பண்டைய வரலாறுகளை அடிப்படையாகக் கொண்ட கதை என்றும், இதைப் போன்ற தேசீய உணர்ச்சியை எழுப்பும் கதைகள் பல படமாக்கப்பட்டால் தான் நாட்டுக்கு நல்லது என்றும், புதிய தேசீயம் உருவாகிக் கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில் இதுபோன்ற பழம்பெரும் கதைகளைப் படமாக்கினல்தான் தமிழ்நாட்டின் வீரம், வாழ்வு, பண்பாடு எல்லாம் மக்களுக்குத் தெரியும் என்றனர்.

திரிபுரசுந்தரி அம்மாள் பேசிய பிறகு, மீனுமூவீஸ் சொந்தக்காரரான சோமசுந்தரம் செட்டியார் ‘ஊமையன் கோட்டை’ என்று எழுதப்பட்டிருந்த போர்டுக்கு மேலிருந்த திரையைத் தள்ளி படத்தை ஆரம்பித்து வைத்தார்.

தலைமை வகித்த எம். ஜி. ராமச்சந்திரன் பிறகு காமிராவை முடுக்கிவிட்டு படப்பிடிப்பை ஆரம்பித்து வைத்தார்.

கடைசியில் அனைவருக்கும் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு கண்ணதாசன் பேசியதாவது :

‘எடுத்த படங்களையே எடுக்க நான் முற்படவில்லை. அல்லது எடுத்துக்கொண்டிருக்கும் படங்களை அப்படியே படமாக்கி வெளியிட நான் நினைத்ததுமில்லை. டூமாஸ் நாவலைப் போன்ற கதைகளை உருவாக்கி நம் தமிழ்நாட்டு பாணியில் படமெடுத்து வெளியிடுவதற்காகவே இந்த ‘ஊமையன் கோட்டை’ கதையை நான் எடுத்துக்கொண்டேனே தவிர, போட்டிக்காகவோ அல்லது ஏதோ ஒருவர் செய்வதை நாமும் செய்வோமே என்பதற்காகவோ நான் இந்தக் கதையைப் படமாக்க வரவில்லை. அப்படி படமாக்க எண்ணம் எனக்கிருந்திருந்தால் நான் எம். ஜி. ராமச்சந்திரனையோ, டி. கே. பகவதியையோ நடிக்க ஒப்பந்தம்செய்திருக்கமாட்டேன். அவர்கள் இதற்கெல்லாம் அப்பாற்பட்டவாகள். ‘ஊமையன் கோட்டை’ என்னும் இப்படம், கட்டபொம்மன் இறந்த ஆறு மாதங்களுக்குப் பிறகு பாளையங் கோட்டைச் சிறையில் அடைக்கப்பட்ட ஊமைத்துரையை மருது பாண்டியர்கள் விடுவிக்க முனைந்த கட்டத்திலிருந்துதான் ஆரப்பமாகிறது. கட்டபொம்மனுக்கு இந்தக் கதையில் இடமில்லை. கட்டபொம்மனைப் பற்றி ஓரிரு இடங்களில் ஊமைத்துரை பேசுவது போன்று வரலாமே தவிர, வேறு ஒரு சம்பந்தமும் கிடையாது. ஆனல், ஊமைத்துரை இல்லாமல் கட்டபொம்மனைப் படமாக்க முடியாது. கட்டபொம்மன் இல்லாமல் ஊமைத்துரையைப் படமாக்க முடியும். ஆகவே இந்தச் சந்தேசம் யாருக்காவது இருந்தால், அதைத் தெளிவுபடுத்தவே இவைகளைச் சொன்னேன்’ என்றுகூறினர்.

பிறகு அவர் இதில் நடிக்கவிருக்கும் நடிகர்களைப் பற்றிப் பேசியபோது,‘ராஜராஜசோழன்’ எப்படி இருந்திருப்பான் என்று நம்மனக்கண் முன்னல் தோன்றச் செய்யும் ‘ராஜராஜ சோழன்’ டி. கே. பகவதி இந்தக் கதையின் தலைவன்-ஊமைத்துரையாக நடிப்பார். எம். ஜி. ராமச்சந்திரன் படத்தின் கதாநாயகன் - வீரதேவனக நடிப்பார். சின்ன மருதுவாக எஸ். எஸ். ராஜேந்திரன் நடிக்கப்போகும் இப்படத்தில் தங்கவேலு, எம். என். ராஜம்,விஜயகுமாரி,மற்றும் பலர் நடிக்கவிருக்கிருர்கள் என்ருர்.

கா. அப்பாதுரை, அ. மு. ப., புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்., ஜூபிடர் சோமசுந்தரம், ஏ. எஸ். ஏ. சாமி, அரு. ராமனுதன், எஸ். எஸ். பி. லிங்கம், அலமேலு அப்பாதுரை, திரிபுரசுந்தரி அம்மை, மதுரை முத்து, திருமதி எவலேன் சாமுவேல், திரு. லேனு, மலர்நிலையம் பழனியப்பன், நடேசன் (நடேஷ் ஆர்ட் பிக்சர்ஸ் உரிமையாளர்) டி. கே. பகவதி, ஜெயந்தி பிலிம்ஸ் அதிபர் கனகசபை, டி. பாலசுப்ரமணியம், மியூசிக் டைரக்டர் தட்சிணமூர்த்தி, பி. வி. கிருஷ்ணய்யர், என். எஸ். ராமதாசன், பிரபு பிலிம்ஸ் உரிமையாளர் ஆர். டி. கோவிந்தன், கே. ஏ. தங்கவேலு, ‘வணங்காமுடி’ சொக்கலிங்கம், ஆர்ட்டிஸ்ட் ஜக்கன், டைரக்டர் நாதன், கிருஷ்ணராவ், அ. பொ. அரசு எம். சி. ஆகியோர் துவக்க விழாவில் கலந்துகொண்டார்கள். ★



கண்ணதாசன் நன்றி கூறுகிருர்

குடியரசுக் கட்சிக்கும் எதிர்க் கட்சிக்கும் இடையில் இருந்த சில பூசல்கள், ஒன்ருகயிருந்த அயர்லாந்தின் இராணுவத்தையே இருகூருக்கி, எதிர்த் தாக்குதல் நடத்திக் கொள்ளும் அளவுக்கு ஓர் உள்நாட்டுப் போரையே உருவாகச் செய்துவிட்டன. இருசார்பிலும் நின்று போரிட்ட படைகள், குமுறலும் கொந்தளிப்பும் குழப்பிவிட்ட குருதிச் சேற்றில் குளிக்கத் தொடங்கிவிட்டன. அன்றுவரை அன்பும் அமைதியும் தவழ்ந்த அந்த மண்ணில் அன்றிலிருந்து அவலம் ஆட்சி செய்யத் தொடங்கிவிட்டது.

அப்பொழுது ஒரு நாள்!

அடிவானில் சுழன்றுகொண்டிருந்த ஒளிவட்டம், அந்தக் கருக்கலின் அணைப்பில் உறங்க, உலகம் இருட்கரங்களுக்கிடையில் சிக்கிக்கொண்டிருந்தது. கருமுகிலின் இடையிடையே ஒளிந்து மறைந்து ஓடிக்கொண்டிருந்த ஒளிதேய்ந்த வெண்ணிலவின் மங்கிய ஒளிக்கதிர்கள், பட்டும் படாமலும் டப்ளின் நகரின்மீது இழையோடிக் கொண்டிருந்தன. விழித்த அமைதியை, அங்குமிங்குமிருந்து எழுந்த துப்பாக்கியின் ஒலிகள் உறங்கச் செய்துவிட்டன.

ஓ'கேனல் பாலத்தின் பக்கத்திலிருந்த ஒரு வீட்டின் கூரையின் விளிம்பில் ஒளிந்துகொண்டு எதையோ திவிரமாக சிந்தித்த வண்ணம் இருந்தான் அவன். அருகிலிருந்த அவனுடைய துப்பாக்கி அப்போதுதான் ஓய்ந்து உறங்கிக்கொண்டிருந்தது. தோளில் தொங்கிக்கொண்டிருந்த பைனுகுலர் தொலை நோக்கியால் அடிக்கடி எதிரியின் பாசறையைப் பார்ப்பதும், பெருமூச்சுவிடுவதுமாக அவன் இருந்தான்.

அன்று முழுவதும் அவன் சாப்பிடவில்லை என்பதை வயிற்றுக்குள் சென்றுகொண்டிருந்த ரொட்டித் துண்டுகள் தெளிவாகக் காட்டின. சாப்பிட்டு முடிந்ததும் தோல் பையிலிருந்த புட்டியை எடுத்து உணர்ச்சியூட்டும் ஒருவகை மதுவை கொஞ்சம் சுவைத்துவிட்டு, மீண்டும் இருந்த இடத்தில் அதை வைத்தான். பித்தனைப் போல் கொஞ்ச நேரம் உட்கார்ந்திருந்த அவனுக்கு புகை பிடிக்க வேண்டும்போல் தோன்றியது. அந்த நேரத்தில் திக்குச்சியைத் தேய்த்து ஒளியுண்டாக்குவது உயிருக்கே ஆபத்து என்று அவனுக்குத் தெரியும். இருந்தாலும் அவனையுமறியாமல் சிகரெட் ஒன்று அவன் உதடுகளுக்கிடையில் ஒட்டிக்கொண்டிருந்தது.

'உங்கள் எதிரி, உங்கள் அருகிலேயே இருந்துகொண்டு உங்களையே கவனித்தவண்ணம் இருக்கிருன்' என்று எச்சரிப்பதைப்போல, அந்த சிகரெட் புகைந்துகொண்டிருந்தது. புகையை உள்ளிழுக்கும்போது ஒளிர்ந்த செவ்வொளி எதிரிக்குத் தன்னைக் காட்டிக் கொடுப்பதைப்போலிருந்தது.

★  சடலம் ★

ஒரு கணம்! உடனே சிகரெட்டை அணைத்துவிட்டு அப்படியே படுத்துக்கொண்டிருக்காவிட்டால், தன்னை நோக்கிப் பாய்ந்து வந்த எதிரியின் துப்பாக்கிக் குண்டுக்கு, குடியரசுக் கட்சியைச் சேர்ந்த அந்த வீரன் இரையாக நேர்ந்திருக்கும். கூரை உச்சியிலிருந்து சிறிது இறங்கி பக்கவாட்டமாகவே கொஞ்ச தூரம் ஊர்ந்து சென்று அருகிலிருந்த புகைப் போக்கியின் பின்புறத்தில் ஒளிந்துகொண்டு மீண்டும் எதிரியின் பாசறையையே வைத்த விழி வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தான் அவன்.

கொஞ்ச நேரத்திற்கெல்லாம், போர்க் கருவிகளைச் சுமந்துகொண்டு, ஓ'கேனல்பாலத்தைக் கடந்து பக்கத்துத் தெருவில் மெதுவாக நுழைந்து, எதிரியின் பாசறைக்கருகில் வந்து நின்ற ஒரு காரைப் பார்த்துவிட்டான். காரிலிருந்து இறங்கிய ஒருவன் யாரையோ எதிர்பார்ப்பதுபோல் ஒருமுறை சுற்றுமுற்றும் பார்த்துவிட்டுக் கொஞ்ச நேரம் அங்கேயே நின்றுகொண்டிருந்தான். எதிரி எதிர்பார்த்ததைப்போலவே, சில வினாடிகளில் கிழிந்த கம்பளியை முக்காடிட்டுக்கொண்டு வயதான ஒருத்தி அவனை நோக்கிச் சென்றுகொண்டிருந்ததைச், புகைப் போக்கியின் பின்னிருந்த அவன் விழிகள் கவனித்துவிட்டன.

எதிரியிடம் அவள் பேசிய ஒலிக் குறிப்புகளும், அடிக்கடி அவள் கை நீண்ட கோணமும் தன்னைத்தான் காட்டிக் கொடுக்கின்றன என்பதை அவன் நொடியில் உணர்ந்துகொண்டான். அவனுடைய இதயத் துடிப்பே அந்த நேரத்தில் எதிரியைத் தன்னிடம் அழைப்பது போலிருந்தது. எண்ணம் செயல்படுவதற்குமுன் ஒளியை வாரியிறைத்துக்கொண்டு, எதிரியின் துப்பாக்கிமுனை தன்னை நோக்கி திருப்புவதை அவன் கவனித்துவிட்டான். இனியும் சும்மாயிருக்க அவன் விரும்பவில்லை,

இரையில்லாமல் ஏங்கிக்கொண்டிருந்த தன் துப்பாக்கியை ஒருமுறை உற்றுப் பார்த்தான். அடுத்த கணம் எதிரியை நோக்கி நீண்டு விழுங்கியது அவன் துப்பாக்கி. எதிர்பாராத தாக்குதலில் பாய்ந்து வந்த குண்டுகளை அணைத்துக்கொள்வதைத் தவிர, வேறு வழி ஒன்றும் தோன்றவில்லை அந்த எதிரிக்கு. அவனுடைய ஆத்திரம் ஒதுங்கி நின்ற அந்த உளவுக்காரியையும் விட்டு வைக்கவில்லை. சுருண்டு விழுந்த இருவரையும் அவர்களைச் சேர்ந்த ஒரு வீரன் கவனித்துவிட்டதையும் கண்டுவிட்டான் குடியரசு வீரன்.

கணப்பொழுதில் அவனிடமிருந்து தன்னை நோக்கிச் சீறி வந்த குண்டுகளுக்குத் தன்னுடைய வலது கரத்தை ஈடுகொடுத்தான் அவன். கையிலிருந்து விழுந்த தன் துப்பாக்கி இன்னும் குறியில்லாமல் குண்டுகளைக் கக்கிக்கொண்டிருந்ததைக் கண்டபோது அவனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. துவண்டு போன தன் வலது கரம் துப்பாக்கியைத் தூக்கும் ஆற்றலையும் இழந்துவிட்டது உடனே கூரையிலிருந்து இறங்கிப் பாதுகாப்பான இடத்துச்குச் சென்று தானே முதலுதவி செய்துகொள்ளத் தொடங்கினன். குண்டு பாய்ந்து கொட்டிக்கொண்டிருந்த குருதியைக் கண்டபோது குண்டு ஊடுருவிச் சென்று துளைத்த இடம் மட்டும்தான் தெரிந்தது. பாய்ந்த குண்டு, முழுதும் துளைக்காமல் முன்கை எலும்பில் தடைப்பட்டு தங்கியிருப்பதை அப்போதுதான் அவன் உணர்ந்தான். இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருக்க அவனுக்கு நேரமில்லை.

கையில் கட்டுப் போட்டுக்கொண்டு தெருவை ஒரு முறை பார்த்தபொழுது எங்கும் ஒரு தற்காலின அமைதி தவழ்ந்துகொண்டிருந்தது. போர்க்கருவிகளுடன் வந்த அந்தக் கார் இப்பொழுது பாலத்தின் அருகில் நின்றுகொண்டிருந்தது. இயந்திரத் துப்பாக்கியை இயக்குமிடத்தில அவனுல் முதலில் சுடப்பட்ட அந்த எதிரி பிணமாகக் கிடந்தான். தெருச் சாக்கடைக்கருகில் துவண்டு கிடந்த் அந்த உளவுக்காரியின் சடலம் அகற்றப்படாமல் அதே இடத்தில்தான் கிடந்தது. இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த அவன் உடனடியாக அங்கிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டிய நெருக்கடியான கட்டத்தில் தான் இருப்பதை, தேய்ந்துகொண்டிருந்த நள்ளிரவைக் கண்டதும் உணர்ந்துகொண்டான்.

தனக்குக் குறி வைத்த அந்த இரண்டாவது எதிரி இப்பொழுது முன்னெச்சரிக்கையுடன் இருப்பதைத் தெரிந்துகொண்டான் அவன். அவனை எப்படியாவது தொலைத்தால்தான் தான் அங்கிருந்து தப்பமுடியும்! துப்பாக்கியைப் பயன்படுத்திக் கொள்ளக்கூட தன்னுடைய கை அனுமதிக்கவில்லை; அனுமதித்தாலும் அதன் வயிற்றுக்கு இரை போட தன்னிடம் குண்டுகள் இல்லை. அந்த நிலையில் அவனிடம் இருந்ததெல்லாம் ஒரே ஒரு கைத்துப்பாக்கிதான். அதுவும் அதிக நேரம் அவனுடன் ஒத்துழைக்காது! அதைக்கொண்டுதான் அவன் தப்ப முயற்சிக்க வேண்டும். பளிச்சென்று அவன் உள்ளத்தில் ஒரு யோசனை மின்னலிட்டது.

தொப்பியைக் கழற்றித் துப்பாக்கியின் நுனியில் அதைப் பொருத்தி, மறைவிடத்திலிருந்துகொண்டு, எதிரிக்குத் தெரியும் வண்ணம் துப்பாக்கியைக் கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்தினன். அவன் நினைத்ததைப் போலவேஎதிரியின் துப்பாக்கியிலிருந்து கிளம்பிய குண்டு தொப்பியைத் துளைத்துச் சென்றது. பிறகு தொப்பி தெருவில் சென்று விழும்வண்ணம் துப்பாக்கியை முன்புறமாகக் கொஞ்சம் சாய்த்துப் பிடித்தான். கொஞ்ச நேரம் கழித்து எதிரிக்குத் தெரிவதுபோல் துப்பாக்கியை இடது கையில் பிடித்துக்கொண்டு உடனே அதையும் தெருவில் விழும்படிச் செய்தான்.

தொப்பியும் துப்பாக்கியும் தெருவில் வந்து விழவே தன்னுடைய எதிரியைக் கொன்றுவிட்டதாக முடிவு செய்துவிட்டான் அந்த அப்பாவி எதிரி. இப்பொழுது அவன் பார்வையும் எண்ணமும் வேறு பாதையில் திரும்பிவிட்டன. குடியரசுக் கட்சியின் வீரனுக்கு இதைவிட வேறென்ன வாய்ப்பு வேண்டும்! அவனுடைய இதழ்களில்நெளிந்தோடிய புன்னகை, "பரிதாபத்திற்குரியவனே! பரிதாபத்திற்குரியவனே!" என்று கேலி செய்வதைப்போலிருந்தது. தன்னுடைய கைத்துப்பாக்கியைஅவன் கரங்கள் சரிபார்த்துக்கொண்டன. மெல்ல கைத்துப்பாக்கி எதிரியை நோக்கிச் சுழன்றது.

— 10-ம் பக்கம் —

விரைவில் ஆரம்பமாகிறது!

தென்றலில்

ம. கி. தசரதன், எம். ஏ.

எழுதும்

தொடர் கதை

வெள்ளையன் ஓடவில்லை; ஆம்பூரில் இருக்கிறான்!

ஆசிரியத் தோழருக்கு,

தமிழகத்திலே, வறுமையால் வாடி வாழ்ந்து கெட்ட சமூகம் "தாழ்த்தப் பட்டோர்" என பெயர் கொண்டு வாழ்ந்து வருகிறது. இவர்கள்தான் கிறித்தவ மதத்தில் பெரிதும் சேர்க்கப் படுகிறார்கள்.

கிறித்தவ மதம் ஏனைய மதங்கள் போல தம் கொள்கைகளை, சொல், செயல் மூலமாகப் பரப்ப கல்வி, மருத்துவ நிலையங்களை நிறுவி, (அரசாங்கம் தலையிடாது அந்நிய நாட்டு ஆதிக்கத்தில்) முக்கியமாக திராவிடத்திலே அதிகமான மருத்துவமனைகளை அத்தகைய எண்ண ரீதியாக பணியாற்றச் செய்கிறது.

வெள்ளையன் ஒழிந்தான், வெள்ளை ஏகாதிபத்யம் தொலைந்தது, சுதந்திரம் வாங்கி பத்தாண்டும், சுதந்திரப் போர் தொடங்கி நூருண்டும் என்று கணக்கிட்டு "ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம்" "வெள்ளைப்பரங்கியை துரை என்ற காலமும் போச்சே" என்று பாடி அன்றே மறந்து விடுகிறோம். உணர்வுள்ள விழாவாகாமல் சடங்காகவே கொண்டாடுகிறோம். இன்றைய இந்தியாவை சுதந்திரக் கண்ணோட்டத்துடன் காணுங்கால், "துரைமார் துரைத்தனம்" தொலைந்ததாக இல்லை. பஞ்சாலைகள் பறங்கிகளால்,— தேயிலை, காப்பித் தோட்டங்கள் வேற்று தேசத்தவரால்,— தொழிற்சாலைகள் அவர்களாலேயே. மருத்துவ மனைகள் வெள்ளை கிறித்தவ மதப் பிரிவுகளால் நடத்தப்பட்டு அந்தந்த இடங்களில் உயர்ந்த பதவிகளில் அவர்களே உட்கார்ந்து கொண்டு "அடிமை ஆட்சி" செலுத்தி வருகிறார்கள். இத்தகைய துறைகளில் இன்னும் சுதந்திரம் அடைந்ததாகவோ, அதற்கான உணர்வு இந்தியர்களுக்கு வந்ததாகவோ தெரியவில்லை. வெள்ளைப் பணம்மேல் நாடுகளிலிருந்து நன்கொடை சகாய நிதி (Charity, Gift) என்று வருவதால் அதன் பின்னால் திரைமறைவில் நடக்கும் அநீதிகள் மறைக்கப்பட்டு விடுகின்றன. அப்படித் தெரிவதும் 'சாதாரணமாக கொள்ளவேண்டியுள்ளது. தன்மானமுள்ளவர்களும், நேர்மை உள்ளங் கொண்டவர்களும் தலையிடுவதில்லை, இது தனிப்பட்ட ஸ்தாபனமாக இருப்பதால்.

மருத்துவத் துறைகளில் வட ஆற்காடு ஜில்லா முதலிடத்தைத் தேடிக் கொண்டுள்ளது; வேலூர், திருப்பத்தூர் இராணிப்பேட்டை, ஆம்பூர் போன்ற இடங்களில் தனிப்பட்ட ஸ்தாபனங்கள், மத வேலைகளுக்காகவும், மக்களின் பொதுநலத்திற்காகவும், சேவை செய்து வருகிறது.

இந் நான்கு ஆஸ்பத்திரிகளில் முதல் மூன்று, வித்தியாசமான முறையில் பெருமை கொண்டிருந்தாலும் நான்காவதாகிய ஆம்பூர், பெதஸ்தா மருத்துவமனை ஆம்பூருக்கு பேர்போனதே. இம் மனையில் 130 படுக்கைகள் உண்டு. பலவிதமான நோயாளிகள் வந்தாலும் அவர்களின் குறைகளைய தனித் தனி வியாதிக்கு படித்தவர்களோ அல்லது ஒரு நிபுணரோ இல்லாதது பெருங் குறை. இங்கு வந்து குவிந்திருக்கும் வெள்ளையர்களோ வேலைத் திறமில்லாதவர்களும் மாதம் ரூ 700—ரூ 1000 வருமானமுடையவராகவும், மேஸ்திரிவேலைபார்க்கவுமே வருகிறார்கள். அவர்கள் செய்வது மக்கள் பணியுமல்ல மகேசுவரன் பணியுமல்ல! அவர்களுக்கு பட்டங்களோ மிகப் பெரிது!

"வைத்திய தொழில் ஒன்று தான் இளகிய இதயங்கள் நடத்தவேண்டிய தொழில்" ஆனால் இங்குள்ள தலைமை அதிகாரியோ தன் 'தலை' போன போக்கெல்லாம் சட்டத்தையும், சாமர்த்தியத்தையும் காட்டுவார். கிறிஸ்தவ சமநீதி என்று வேண்டியவனுக்கு ஒரு நீதி வேண்டாதவனுக்கு ஒரு நீதி என்று அமல் நடத்துவார்.

"மனித குணத்தின் - அன்பு இதயத்தின் - அடை விடாக இருக்கவேண்டிய ஆஸ்பத்திரி மிருக குணத்தின் பிறப்பிடமாய் இருக்கிறது. அலறுகிற நோயாளிகளையும் அவனுக்கு ஆறுதல் தர அல்லது மருத்துவ அறிவுரைகள் (Medical advicc) தர வரும் உறவினர்களையும் சகஜமாகச் சருதிக் கொண்டு நடக்கிற அலட்சிய வைத்தியர் புல்லே. ஏழைகளுக்கு ஏற்ற இடமில்லாமல், பணம் படைத்த நோயாளிகளுக்கு பாதை திறந்து வைத்துவிட்டார். எல்லா வசதிகளிருந்தும் பெரிய டாக்டரைப் (Dr. Pulle) பார்க்கப் போகும் நோயாளி உடல் வேதனையோடு மன வேதனையும் சுமந்துக்கொண்டு போகும் கண்ணுருவிக் காட்சியை அன்றாடம் காணலாம். "இந்த டாக்டர் சமுதாயத்தின் பயங்கர எதிரி, கொலையை தொழிலாகக் கொண்டவர்களைவிட மோசமானவர். இந்தியரை இந்தியரென்றே, ஏன் மனிதரென்றே மதிக்காத ஓர் பிறவி. தேசத்தை-சுதந்திர தாகத்தை அடக்கப் பார்ப்பவர். தன் ஏழாண்டு ஆட்சியில் ஏறத்தாழ 12 சுதேச டாக்டர்களை வெளியேற்றியவர். இன்னும் 10 இதர வேலையாட்களையும் தன்னிஷ்டமாக அனுப்பி விட்டார். ஆஸ்பத்திரியை தன் பயிற்சி ஸ்தலமாகவும் இந்தியரை கருவிகளாகவும் பயன்படுத்தி வருகிறார்.

"உடல் நோயாளிகளைவிட மோசமான மன நோயாளிகள் வைத்தியர்களாக வரக்கூடாது. வாழ்க்கையை வளமாக்கிகொள்ளத்தான் இந்திய மண் உபயோகமாகிறது. வேலையைக் கற்றுக்கொள்ளத்தான் இந்தியர்கள் தேவைப்படுகிறார்கள்.

இந்த டாக்டரை, இந்தியருக்கு சேவை செய்ய வேண்டாதவர் என்று ஆம்பூர் கிறித்தவ இம்மானுவேல் ஆலயமும், ஆம்பூர் நகரசபையும் ஏகமானதாகத் தீர்மானித்து சென்னை மாநில இந்திய மத்திய அரசாங்கத்திற்கும் மனு செய்துக் கொண்டுள்ளது.

இப்படிப்பட்டவர்கள் எத்தனையோ இடங்களில் மருத்துவ மனைகளில், பஞ்சாலைகளில், தொழிற்சாலைகளில் தேயிலை—காப்பித் தோட்டங்களில் 'சர்வாதிகார ஆட்சி' நடத்தி வருகிறார்கள். இந்த வெள்ளை ஸ்தாபனங்களை அரசாங்கத்தார் தன் நேரிடையான அதிகாரத்திற்குள் வைத்துக்கொள்ள வேண்டும். இல்லையேல் தேசிய மயமாக்கி விடவேண்டும். அல்லது இக் 'காலனி ஆட்சியை' எதிர்த்து சுதந்திரப் போர் ஆங்காங்கு நடக்காமலிருக்கப் போவதில்லை. கூச்சலும் குழப்பமும் குறைவடையப் போவதில்லை.

எனவே சுதந்திர வீரங்கொண்டவர்களும் சட்டமன்ற உறுப்பினர்களும், கட்சி, மத சார்பில்லாமல் ஒன்றுபட்டு இத்தகைய அநீதிகளுக்கு சட்டத்தினாலாவது வழி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

தென்னக உரிமை கோரும்

— ஆல. சால. அரசு

இரண்டு ரூபாய்...
ஐந்து ரூபாய்...
தமிழையே கற்று
தமிழுக்கே உழைத்து
தமிழ் வடிவில் இயங்கி,
கொள்கைப்பற்றுக்
கொண்டு
தடியடிகளைத் தாங்கி,
வறுமையில் அவதிப்படும்
மாபெரும் புலவருக்குத்
தரக்கூடாதா?
அன்னு பொருளாளர்
நாவலர் செயலாளர்
விழாக்குழு உருவாகிறது.
உயிருள்ளபோதே
மரியாதை.
உங்கள் பங்கு?
மனமிருந்தால் வழியுண்டு;
மனம் இருக்கிறதா?
செயல்படுத்துங்கள்.

நண்பர்களே,

பணம் வருகிறது.
பறந்து போகிறது.
சம்பாதிக்க ஓடுகிறோம்.
சம்பாதிக்கிறோம்.
செலவழிக்கிறோம்.
அதில் ஒரு ரூபாய்...

நிதி அனுப்ப முகவரி:

சி. என். அண்ணாதுரை,
'அறிவகம்'
24, சூரியநாராயண செட்டி தெரு,
சென்னை-13.

பன்மொழிப்புலவர் பதில் தருகிறார்

செ. இராமசெயம்
திருநெல்வேலி.

(அ) முதலடியும் ஈற்றடியும் நாற்சீர் பெற்று, ஈற்றயல் அடி முச்சீர் பெற்று ஒரு பாட்டு வரின் அதை நேரிசை ஆசிரியப்பாவில் சேர்க்கவேண்டுமா? இணைக் குறள் ஆசிரியப்பாவில் சேர்க்க வேண்டுமா?

(ஆ) தேறற்க யாரையும்
தேராது தேர்ந்தபின்
தேறுக தேறும் பொருள்.

—என்ற குறளின் கருத்திற்கும்,

ஒற்றொற்றித் தந்த
பொருளையும் மற்றுமோர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல்

—என்ற குறளின் கருத்திற்கும் கருத்து வேறுபாடு காணப்படுகிறதே! தீர்க்க.

(அ) ஆசிரியப்பாவில் எல்லா அடியும் நாற்சீர் பெற்று, ஈற்றயலடி மட்டும் முச்சீராய் இருந்தால் அது நேரிசை ஆசிரியப்பா.

முதலடியும் ஈற்றடியும் நாற்சிராய், ஏனைய அடிகள் இரு சீராகவோ முச்சீராகவோ குறைந்து வந்தால் அது இணைக்குறள் ஆசிரியப்பா.

கேள்விக்குரிய ஆசிரியப்பா இந்த இருவகையாகவும் இருக்க இடமுண்டு. ஏனென்றால் கேள்வியில் பாவிற்கு இத்தனை அடிகள் என்பதும் கூறப்படவில்லை. முதல், ஈறு, ஈற்றயல்தவிர மற்றைய அடிகள் பற்றியவிபரமும் தரப்படவில்லை. இந்நிலையில் ஈற்றயலடிமுச்சீராயமைந்த இணைக் குறளாசிரியப்பாவாகவும் அது இருத்தல்கூடும், ஏனைய முதல் ஈறல்லாத அடிகள் இருசீர், முச்சீராக நின்றால். அல்லது அது நேரிசையாசிரியப்பாவாகவும் இருக்கலாம், அவ் ஏனையடிகள் யாவும் நாற்சிராக இருந்தால்.

(ஆ) இக்குறட்பாக்களில் முதலாவது திருக்குறள் பொருட்பாலில் தெரிந்து தெளிதல் என்ற 51-ம் அதிகாரத்தில் பரிமேலழகர் முறைப்படி 8-வது குறட்பா. மணக்குடவர் முறைப்படி 9-வது குறட்பா. பிந்தியது அதே பாலில் ஒற்றாடல் என்னும் 59-ம் அதிகாரத்தில் பரிமேலழகர் முறைப்படி 8-வது குறட்பா. மணக்குடவர் முறைப்படி 9-வது குறட்பா.

இரண்டு குறட்பாக்களுக்கும் பொருளில் முரண்பாடு காணப்படுவதன் காரணம், முதற் குறட்பாவுக்குப் பொதுவாக உரையாசிரியர்களும் சிறப்பாகப் பரிமேலழகரும் கொண்ட பொருளேயாகும். ஆனால் அக்குறட்பாவுக்கு உரையாசிரியர்கள் கொண்ட பொருள் 'தெரிந்து தெளிதல்' என்ற அதிகாரத் தலைப்புக்கே அவர்கள் தந்துள்ள விளக்கம் சார்ந்தது. 51-ம் அதிகாரம் தெரிந்து தெளிதல் என்றும், 52-ம் அதிகாரம் தெரிந்து வினையாடல் என்றும் அமைந்துள்ளன. ஆனால் 47-ம் அதிகாரமும் கிட்டத்தட்ட 52-ம் அதிகாரத்தின் தலைப்பை ஒத்துத் தெரிந்து செயல்வகை என்று அமைந்துள்ளது. இதனால் பரிமேலழகர் 47-ம் அதிகாரம் தெரிந்து செயல்வகை என்பதை 'அரசன் தான் செய்யும் வினைகளை ஆராய்ந்து செய்யும் திறம்' என்றும், 51-வது அதிகாரம் 'தெரிந்துதெளிதல்' என்பதை 'அமைச்சர் முதலாயினோரைப் பிறப்பு, குணம், அறிவு என்பன வற்றையும், செயலையும் காட்சி, கருத்து ஆகம மென்னும் அளவைகளான் ஆராய்ந்து தெளிதல்' என்றும் விளக்க முனைந்துள்ளார்.

பொதுவாக எல்லா உரையாசிரியர்கள் உரைகளும் புதிய உரைகளும் கூட இதை ஒத்துக்கொண்டன என்றே தோற்றுகிறது. ஏனெனில் இதற்கு வெறும் புதுவிளக்கம் காணமுடியவில்லை. ஆனால் மணக்குடவர் புதுவிளக்கங்காண விட்டாலும் புது விளக்க நாடியுள்ளார். 'தெரிந்து செயல் வகை' என்ற அதிகாரத்துக்கு, 'வினை செய்யும் கால் அதனை எண்ணிச்செய்ய வேண்டுமென்று கூறுதல்' என்று குறித்து, 'தெரிந்து தெளிதல்' அதிகாரத்தில் 'ஆராய்ந்து தெளிதல்' என்று பொது விளக்கம் தந்து, 'செய்து முடிக்கும் அமாத்தியரையும் எண்ணிக்கொள்ள வேண்டுதலின்' என்று மறுவிளக்கம் செய்தார். ஆனால் அவர் நாடும் விளக்கத்திலும் பரிமேலழகர் கருத்தின் கருமூலம் தென்படுகிறது. பரிமேலழகர் விளக்கத்தை மறுப்பதற்கு இவ்விளக்கம் போதாது.

'திருவள்ளுவர் வட நூற் பொருளை எண்ணினரா?' என்னும் ஓர் அரிய ஆராய்ச்சிச்சிற்றேடு திரு. சோமசுந்தரம் பிள்ளை அவர்களால் 'திராவிட இல்லம்' வெளியீடாக வந்துள்ளது. அதில் மணக்குடவர் குறட்பா வரிசைகளை அடிப்படையாகக் கொண்டுமணக்குடவர் திட்பப்படக் கூறுது நுட்பமாக விட்டிருக்கக்கூடியது என்று கருதத்தக்க வகையில் ஒரு புது விளக்கம் தந்துள்ளார். அது அதிகாரத்துக்கு மட்டுமின்றி இக்குறட்பாவுக்கும் ஏற்றம் தரும் நற்பொருள் காண உதவுகிறது.

அவர் கருத்துப்படி இவ்வதிகாரம் (மேற்படி ஏடு பக்கம் 55) 'எவ்வகைவினையைத் தெளிதல் வேண்டும், யாரின் துணை கொண்டு, எவரின் துணையை நீக்கித் தெளிதல் வேண்டும் என்பதையும்...... வரிசைப்படுத்தும் நிலையுள்ளது' (மணக்குடவர் கொண்ட இவ்வதிகாரத்தின் குறட்பாவரிசை பரிமேலழகர் அடிப்படையில் 1, 4, 2, 3, 6, 7, 8, 9, 10, 5 என்பதாகும்.)

'இந்நிலை தமிழ் வேந்தர்கள் காலத்து நிலவிய ஐம் பெரும் குழு, எண்பேராயம் எனப்படும் அமைச்சர் அவையைத் தோற்றுவிக்கிறது' என்றும் அறிஞர் சோமசுந்தரனார் விளக்கம் அளித்துள்ளார்.

'தெரிந்து தெளிதல்' என்பதிலும் 'தெரிந்து செயல்வகை' என்ற முன்னை அதிகாரத்திலும், 'தெரிந்து வினையாடல்' என்ற பின்னை அதிகாரத்திலும் 'தெரிந்து' என்பது செயலையே அன்றி அமைச்சரையோ, வேறு பெயரையோ அல்ல. தெரிந்து செயல்வகை என்னும் முந்திய அதிகாரத்தில் அதற்கு முன் கூறப்பட்ட பெரியார் துணை, சிறியார் இயல்பு தெரிந்துசெயலின் தன்மையும் சூழலும் தெரிந்து செய்க என்னும் பொதுப்பொருள் உடையது அதனையடுத்து வரும் 'வலியறிதல்' (48-ம் அதிகாரம்), காலமறிதல் (49-ம் அதிகாரம்) இடனறிதல் (50-ம் அதிகாரம்), ஆகியவை சூழலையறிதலை வகுத்து விளக்கின. எனவே 51-ம் அதிகாரமாகிய தெரிந்து தெளிதல் என்பது முன்னை அதிகாரங்களின் தொகுப்பாகவும், பின்னை அதிகாரங்களின் தோற்றுவாயாகவும் செயல்,செயலின் துணை, செயலின் தன்மை, செயலின் பயன் ஆகியவைகளில் கருத்தூன்றுகிறது. 'தெரிந்து வினையாடல்' என்ற அடுத்த (52-ம்) அதிகாரம் செயலின் கருவாகிய துணைவர், செயலின் பயன் ஆகியவற்றை மேலும் விரித்துரைக்கிறது.

பரிமேலழகர் அதிகாரம் முழுவதுமே அமைச்சர் முதலாயினோரைத் தெரிந்து தெளிவதுபற்றியது என்று எண்ணியதனால், முதற் குறட்பாவிலுள்ள இரண்டு அடிகளையும் தவறாக இணைத்தார். முதலடிகளில் 'தேறற்க யாரையும் தேராது' என்பதற்கு 'அமைச்சர் முதலிய யாவரையும் ஆராயாது தெளியாதொழிக' என்று பொருள் கூறினார். இரண்டாவது அடியிலுள்ள 'தேர்ந்தபின், தேறுக தேறும் பொருள்' என்ற வாசகத்திலும் அமைச்சர் முதலியவரைக் குறிப்பிடவில்லை, 'பொருள்' அல்லது 'செயலே' குறித்தது. ஆனால் பரிமேலழகர் வகுத்தஅதிகாரவிளக்கப்படி அதுவும் அமைச்சர் முதலாயினோரையே குறிக்க வேண்டும் என்று புலவர் கருதினார். ஆகவே தான 'ஆராய்ந்தபின் தெளியும் பொருட்களை ஐயுறு தொழிக' என்று பதப் பொருள் கூறி விளக்கவுரையிலேயே அமைச்சர் முதலாயினோர் செய்யும் செயல்களை என்பது பெறப்பட வைத்தார்.

உண்மையில் அதிகாரம் செயலையும், செயலின் துணைகளாகிய அரசியற் பணியாளரையுமே குறித்தது. அடுத்த அதிகாரத்தில் 'இதனை இதனால் இவன் முடிக்கும் என்று வள்ளுவர் கூறியது இத்தகைய செயற் கருவிகளாகிய பணி மக்களையே- அமைச்சர்களையல்ல. ஆகவே 'அமைச்சர் முதலாயினோர்' என்ற பரிமேலழகர் கூற்றுத் தமிழர் குடியாட்சி மரபுக்கு முரணானது. அமைச்சர் சொற்கேட்டு மன்னன் நடக்கிறானேயன்றி, அமைச்சரையே செயல் செய்ய விடுவதில்லை. இது இக்காலக் குடியாட்சியில் சிறிது மறைந்துள்ளது. ஏனெனில் இங்கே அமைச்சர்களுக்குரிய இடத்தில் பணிமனை முதல்வர்கள் அமர்ந்து வேலை செய்கின்றனர். அறிஞர் சோமசுந்தரனார், துணைவர் அமைச்சரல்லர் என்று கொண்டாலும், அமைச்சரவையிலுள்ள ஐம்பெருங் குழுவினர், ஐம்பேராயத்தாராய் இருத்தல் கூடும் என்று கருதியுள்ளார். ஆனால் ஐம்பெருங் குழுவினர் ஐம்பேராயத்தார் ஆகியோர் பொதுவாக அமைச்சரைப்போல அறிவுரை தருபவரே. இங்கே குறிப்பிட்டது குடியாட்சி முறையின் சட்ட அமைப்புப் பகுதி (**Legislator**) போன்ற நிலையிலுள்ள இவர்களல்லர். நடை முறைப் பகுதி (**Executive**) அதனுடன் ஒருசார்பொறுப்புடைய சட்ட நடைமுறைப் பகுதி ஆகியவர்களே இவர்களும். எண்பேராயத்தில் இடம் பெற்றாலும், அவர்கள் செயற் பொறுப்பு அதற்கு வெளியிலுள்ள நடைமுறைத் துறையிலேயே. திருவள்ளுவர் இவ்வதிகாரத்திலும் அடுத்த அதிகாரத்திலும் செயலையும் அரசன் கீழ் நின்று அவன் கட்டளைப்படி அது செய்யும் பணியாளரையும் பற்றியேயன்றி, அறிவுரைகளும் அமைச்சர், ஐம்பெருங் குழுவினர், எண்பேராயத்தினர் ஆகியவர்களைப்பற்றியல்ல என்னல் வேண்டும்.

'அரசன் பணியாளர்களின் தகுதிகளை ஆராயாமல் அவர்களைத் தேர்ந்து பணியில் அமர்த்தக் கூடாது. தேர்ந்தெடுத்தபின், அவர்கள் செய்யும் செயல்களையும் ஆராய்ந்து தெளிக' என்பதே முதற் குறட்பாவின் பொருள். 'துணைவரையும் தேர்ந்த மர்த்தி அவர் செய்யும் செயலையும் தேர்ந்து தெளிக' என்பதற்கு மாறாக, 'தேர்ந்தெடுத்தவன் செயலை ஐயுறாதே' என்று உரைகள் யாவுமே கூறின. அதிகாரம் அமைச்சர்பற்றியது என்ற தவறான எண்ணமும் அடுத்த குறட்பாவிலுள்ள 'தெளிந்தான் கண் ஐயுறவு' என்ற கருத்தும் இக்குழப்பத்துக்குக் காரணம். செய்பவன் மீது ஐயுறவு கொள்ளாதே என்று பின் குறளில் கூறும் வள்ளுவர், இங்கே 'செயலை ஆராய்' என்கிறார். ஏனெனில் செய்பவன் நேர்மையுடையவன், அறிவுமிக்கவனாய் இருக்கலாம். அதனால் செயல் சரியாய் இருந்து தீர வேண்டும் என்றில்லை. அத்தகையாரிடத்தும் 'குறை' நேரும் என்பதை

'அரியகற் றாசற்றார் கண்ணும் தெரியுங்கால் இன்மை அரிதே வெளிறு'

என்ற இதே அதிகாரத்தின் முந்திய குறட்பா (503) கூறுகிறது.

இக்குறட்பா துணைவரையமட்டுமன்றி அவர் செயலையும் ஆராய வேண்டும் என்று கூறுவதாக உணர்ந்தால்,சேள்வியில் தரப்பட்ட பிந்திய குறட்பாவின் முரண்பாடு மறைகிறது. ஏனெனில் அது இதே கருத்தையே ஒற்றர்மேல் வைத்து இன்னும் மிகுதியாக வலிவுறுத்துகிறது. அது ஒற்றரை நம்பாததால் அல்ல. ஒற்றர் நம்பகமானவராக இருக்கலாம். திறமையுடையவராகவும் இருக்கலாம். ஆயினும் அவர் அறிந்த செய்தியை இன்னோர் ஒற்றர் முடிவால் முற்றிலும் வலியுறவுபடுத்திற் தெளியப்படுத்திக்கொள்க என்பதே இதன் பொருள்.

"விஞ்ஞானி"

28-9-57 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு மயிலை ரசிக ரஞ்சனி சபாவில் ஆசிரியர் கண்ணதாசன் தலைமையில், நாடகக்கலை அரங்கத்தார் அளிக்கும் 'விஞ்ஞானி' எனும் சமூக நாடகம் நடைபெறும். அத்துடன் 'சாக்ரட்டீஸ்'— துணை நாடகமும் உண்டு.

டிக்கட்:- ரூ. 3, 2, 1,

— 4-ம் பக்கம் தொடர்ச்சி —

திருக்கிறது. ஆம்! துணிவை மட்டுமே மூலதனமாகக் கொண்டு முன்னேற்றத்திற்கான சந்தர்ப்பத்தை மனிதன் ஆக்கிக் கொள்ள முடியும். இந்த உலகம் அத்தகையது. பயமும் பணிவும் இங்கே பலனளிப்பதில்லே. அன்பும் அறமும் இங்கே வாழ்வளிப்பதில்லே. நேர்மையான நீதியும் இங்கே நிம்மதியைத் தருவதில்லே. பகட்டும், படாடோபமும் தேவைப்படுகிறது. தெரியாததையெல்லாம் தெரிந்தமாதிரிக் காட்டிக் கொள்பவனுக்குத் தெம்பு மிகுந்த வரவேற்புக் கிடைக்கிறது. "ஐயோ அவனு? அசகாய சூரனுயிற்றே!" என்று பத்துப் பேரைப் பேச வைக்கிறது! சிலர் அவனே மதிக்கத் தலேப்படுகிருர்கள். ஏதாவது ஒரு இடம் அவனே இழுத்துப் போட்டுக்கொள்கிறது.

அந்த முயற்சியில் இறங்கிவிட அவன் துணிந்தான். பத்து நாட்கள் கிராமத்தில் இருந்துவிட்டு பழையபடியும் திருச்சிக்குப் புறப்பட்டான். அவன் சீக்கிரம் போய்ச் சேரக்கூடிய நகரம் திருச்சியாகத்தான் இருந்தது.

திருச்சி நகரம் இப்பொழுதும் அவனே எதிர்கொண்டு அழைக்கவில்லே. அவனேதான் வந்து இறங்கினுன். பழையபடியும் நகர்வலம்! இதில்தான் அவனுக்குப் பழக்கம் அதிகமாயிற்றே! ஆனுல், திருச்சி இப்போது அவனே ஏமாற்றவில்லே. அவன் அலேந்த அலேச்சலுக்குப் பலன் கிடைத்தது. திருச்சி 'இந்தியன் பேங்கி'ல் பொருளாளராக இருந்தவரும், அவனது உறவினருமான ஒருவரை 'மெயில் காட் கேட்' அருகில் அவன் சந்தித்தான். அவர் அவனே விசாரித்தார். தன் நிலேயை அவன் கூறினுன்.

மணவழகர் மன்றம்

பெத்துநாயக்கன்பேட்டை
சென்னே-1.

[துவக்கம் 1957]

திருக்குறள் வகுப்பு

மேற்படி மன்றத்தின் சார்பில் பெத்துநாயக்கன்பேட்டை, முருகேச முதலித் தெரு, 2-ஆம் எண்ணுள்ள கட்டிடத்தில் ஒவ்வொரு புதன்கிழமை மாலே 6-30 மணிக்குத் "திருக்குறள் வகுப்பு" புலவர் கா. சி. தனக்கோட்டி (தமிழ் ஆசிரியர், தொண்டைமண்டல உயர்நிலேப் பள்ளி, சென்னே) அவர்களால் நடத்தப்படும். அனேவரும் வந்து பயனடையுமாறு வேண்டப்படுகிருர்கள்.

பெண்களுக்குத் தனி இடம் உண்டு.

வீட்டிற்கு அழைத்துச் சென்ருர். அங்கே சாப்பிட்டுவிட்டு இருவரும் பேசிக்கொண்டிருக்கும்போது, அவருக்கு ஒரு பத்திரிகை வந்தது. புதுக்கோட்டையை அடுத்த இராமச்சந்திரபுரத்திலிருந்து அந்தப் பத்திரிகை வெளிவந்து கொண்டிருந்தது. பத்திரிகையைப் பிரித்துப் பார்த்த அவர் சொன்ன ஒரு செய்தி, அவனுக்கு எல்லேயில்லா மகிழ்வைத் தந்தது. அந்தப் பத்திரிகையின் உரிமையாளர் அவரது சகலேதான். "இந்தப் பத்திரிகைக்கு வேண்டுமானுல் போகிறீர்களா?" என்று அவர் கேட்டார். அதை மறுத்துவிடக் கூடிய சூழ்நிலேயில் அவன் இல்லே. உடனே உற்சாகமாக ஒப்புக்கொண்டான். "இதற்கு முன்னுல் ஏதாவது பத்திரிகைகளில் இருந்திருக்கிறீர்களா?" என்று அவர் கேட்டார். "இல்லே" என்று சொல்லப் போன அவன், தயங்கினுன். இந்த உலகத்திற்குத்தான் பொய் தேவைப்படுகிறதே! இரண்டு மூன்று பத்திரிகைகளின் பெயரைச் சொல்லி அங்கெல்லாம் இருந்ததாகச் 'சரடு' விட்டான். அவர் ஒரு அறிமுகக் கடிதம் எழுதி, அதில் அவனேப் பற்றிப் பிரமாதமாகக் குறிப்பிட்டு,வேலேயில்வைத்துக்கொள்ளும்படி சிபார்சும்செய்திருந்தார். அதைப் பெற்றுக்கொண்டு அவன் மிகுந்த நன்றியுணர்ச்சியோடு வெளியேறினுன். அறிமுகக் கடிதம் கிடைத்துவிட்டது. போனுல் வேலேயும் கிடைத்துவிடும்! ஆனுல் போவதற்குப் பணந்தான் இல்லே. சரி! அதை எங்கேயாவது தேடுவோம் என்று அவன் நடந்தான். மேலப்புலவன் சாலேயில் அவன் வந்துகொண்டிருக்கும்போது, ஒரு வட்டிக்கடை அவன் கண்களுக்குத் தட்டுப்பட்டது. அதை அவனது ஊரைச் சேர்ந்தவர்கள் சில பேர் நடத்திக்கொண்டிருந்தார்கள். சிறிதுகூடத் தயக்கமின்றி அவன் அந்தக் கடையினுள்ளே நுழைந்தான். அங்கு கிடைத்த வரவேற்பு அவனுக்கு மகிழ்ச்சியைத் தந்தது. வரும்போது எல்லாம் சேர்ந்து வரும் என்பார்களே; அது மெய்யாயிற்று. அவன் கேட்டவுடனேயே அங்கே பணம் கிடைத்தது. பெற்றுக்கொண்டு புறப்பட்டான். இப்போது உலகம் அவனுக்குத் தொல்லே நிறைந்ததாகத் தோன்றவில்லே. சே! சே! இதல்லவா உலகம் என்று தோன்றிற்று.

இதோ வந்துவிட்டது இராமச்சந்திரபுரம். அவன் பஸ்ஸை விட்டுக் கீழே இறங்கினுன்.

- அடுத்த இதழில் முடியும் -



அக்டோபர் 13!

வடார்க்காடு மாவட்ட இந்தி எதிர்ப்பு மாநாடு சென்ற 21, 22 தேதிகளில் சீரும் சிறப்புமாக நடைபெற்று முடிவுற்றது.

சுவாமி அருணகிரிநாதர் தலேமையில் நடைபெற்ற இம்மாநாட்டில் பல்லாயிரக்கணக்கான மக்கள் குழுமியிருந்து- இந்தித் திணிப்பை எதிர்க்க மாநாடு எடுக்கவிருக்கும் முடிவு என்ன என்று அறியப் பேரார்வம்கொண்டவர்களாய் மாநாட்டு நிகழ்ச்சிகளேக் கூர்ந்து கவனித்தவண்ணமிருந்தனர்.

பல்வேறு வெளி மாவட்டங்களிலிருந்தும் ஏராளமானவர்கள் வந்து இம்மாநாட்டில் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது. கழகத் தோழர்கள் மட்டுமின்றி, பல்வேறு கருத்துக்கொண்ட மக்களும், வரவிருக்கும் இந்தித் திணிப்புப் பேராபத்தை உணர்ந்தவர்களாய் மாநாட்டுக்கு வந்திருந்து, தங்கள் தாய் மொழிப்பற்றையும், இந்தி எதிர்ப்பில் தாங்கள் கொண்டுள்ள அக்கறையையும் காட்டிக்கொண்டனர்.

பரந்த வெளியில் அழகுற அமைக்கப்பட்டிருந்த சாமி அரங்கில் இம்மாநாடு நடைபெற்றது.

"இந்த நாட்டு மக்களுக்கு இந்தி எதிர்ப்பு உணர்ச்சியை யூட்டவும், தாயகமொழி தமிழைக் காப்பாற்றவும் இந்தி நமக்கு இம்மியளவும் அவசியமில்லேயென்பதை எடுத்துரைக்கவும், அதற்கான கருத்துரைகளேப் பரப்புவதற்கான பணிகளே இன்றிலிருந்தே நாம் செய்ய வேண்டியவர்களாக இருக்கிருேம்.

"எனவேதான், முதற் கட்டமாக அக்டோபர் மாதம் 13-ம் நாள் ஞாயிறன்று 'இந்தி எதிர்ப்புநாள்' என்ற நாளேக் கொண்டாடுவது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. எனவே, அக்டோபர் 13-ந்தேதி ஞாயிற்றுக்கிழமையை, இந்தி எதிர்ப்பு நாளாகக் கொண்டு, நாடு நகரங்கள், பட்டி தொட்டிகள் அத்தனேயிலும், கழகச் சொற்பொழிவாளர்கள் வர இயலாத இடத்திலே ஆங்காங்குள்ள தோழர்களே கட்டாயம் ஊர்வலம் நடத்தி, ஒலி முழக்கம் செய்து, கூட்டங்கள் போட்டு, இத்தகைய கருத்து விளக்கங்களே நாட்டு மக்களிடையே பரப்பி, எதிர்காலத்தில்-இந்திஎதிர்ப்புப் போராட்டம் வருகின்ற காலத்தில் அதற்கான வீரர்கள் படையைத் திரட்டுகிற அளவிலே, நல்ல பல கருத்துரைகளே எடுத்துக் கூறுகின்ற நாளாக அக்டோபர் 13-ந்தேதி ஞாயிற்றுக்கிழமையைக் கொள்ளவேண்டும்"-என்று கழகத் தோழர்கள் அத்தனே பேரையும், பொதுமக்களேயும், இந்தி எதிர்ப்புணர்ச்சியிலீடுபட்டிருக்கிற அனேவரையும், மாநாட்டில் பேசியபோது பொதுச்செயலாளர் விரும்பிக் கேட்டுக்கொண்டிருக்கிருர்.

— 1 ம் பக்கம் தொடர்ச்சி —

வரம்பிற்கு நிலப் பரப்பின் அளவு, கொள்கைகளில் ஒன்றாக இருக்க வேண்டும். காந்தி யாரைப் போற்றட்டும், நேருவை மதிக்கட்டும், ஆனால் அதிகாரம் என்னும்போது, ஆதிக்கம் என்னும்போது கா. சீ. க. புத்திக் கூர்மையுடன் நடந்துகொள்ள வேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் கா. சீ. க. வடநாட்டுப் 'பெருந்தலை'களுக்கு 'ஏறு குதிரை'யாக இருக்கக் கூடாது.

நாட்டுப் பிரிவினையை கட்சியின் உயிர்க் கொள்கையாக வைத்துக்கொள்ள நாம் யாரையும் வேண்டத் தயாராக இல்லை. வேண்டிக் கேட்டுக்கொண்டு ஆளைத் திரட்டும் மிக எளிதான கொள்கை அல்ல நாட்டுப் பிரிவினை என்பது. தனிநாடு கேட்பது முறைதான் என்று யாருக்குப் பட்டாலும் அவர்கள் தானாக வந்து சேருவதைத் தவிர வேறு வழியில்லை. தமிழர் என்ற அடிப்படையில் எல்லா மதத்தினருக்கும் இன்றியமையாத சில தேவைகளை கா. சீ. க. எந்தக் காரணம் கொண்டும் விட்டுக் கொடுக்கக் கூடாது.

'இந்தியாவின் ஒற்றுமையை விரும்புகிறோம் எனவே கா. சீ. க. இந்தியை ஆதரிக்கிறது' என்று ஒரு தீர்மானம் நிறைவேறினால்?

இந்திய சர்க்காரின் ஐந்தாண்டுத் திட்டத்தை கா. சீ. க. ஆதரிக்கிறது என்று முடிவானால்...?

காந்தியாரின் இராட்டைக்குப் பதிலாக தக்கிலியைக் கொடியில் பொறிப்போம் என்று தீர்மானமானால்?

—பொதுமக்கள் ஒருபோதும கா. சீ. க. வை தமிழ் நாட்டுக் கட்சியாக மதிக்கமாட்டார்கள்.

நமக்கு ஏன் இந்தச் சந்தேகங்கள் என்றால், அதில்உள்ள தலைவர்கள் தமிழ் நாட்டின் மக்கள் பிரச்சினையைப் பற்றி 1942 க்கு முன்னர் தான் பேசியிருக்கிறார்களே தவிர அதற்குப் பிறகு அல்ல! இன்னும் சிலர் கா. சீ. க. வில் இருக்கிறார்கள், அவர்கள் பொது மக்களைப் பார்த்தே நெடுநாட்களாகிவிட்டன. சிவகங்கை இளவரசர் அவர்களில் ஒருவர்!

மாரிசாமி இருக்கிறார்; அவர், தி. மு. க. நடத்திய ஐந்தாண்டுத் திட்டக் கண்டனக் கூட்டங்களைக் கண்டு பன்முறை சீறி விழுந்தவர். 'வடக்கே நதி ஓடுகிறது. எனவே அங்கே அணைக்கட்டுத் தேவை. தெற்கே நதிகள் இல்லை. எனவே தெற்குத் திட்டங்களுக்குப் பணம் ஒதுக்கவில்லை. இது தி. மு. க. களுக்குத் தெரியவில்லை. கூந்தல் இருந்தால்தானே பூவுக்குவேலை' என்று ஒருகாலத்திலே தமது பத்திரிகையிலே எழுதினார். இப்போது கா.சீ.க.வில் அவரும் ஒரு தூண். அதே மாரிசாமிதான் கா. சீ. க. மாரிசாமியா? அந்தப் பழைய பாணியில்தான் மதுரையிலும் பேச்சு அமையுமா? தலைவர்களைப்பற்றி நமக்குப் புரியவில்லை. தேவர் இருக்கிறார். அழகாகப் பேசுவார். ஆனால் ஆத்மீக நியாயம் பேசுவார். கூடுவதோ பூர்வாங்க அரசியல் மாநாடு. மற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் நாடறியும். உருவம் பழையதானாலும் உள்ளத்தில் மாற்றமில்லையானால் இனிமேல் எந்தக் கட்சிக்கும் தமிழ் நாட்டில் வேலை இல்லை. மறுபடியும் நினைவுப் படுத்துகிறோம், பூமி நூலைத் தேடாத கட்சி இனி தமிழ் நாட்டில் வாழாது! வாழாது!! வாழாது!!!

-தென்னரசு.

தென்றல் - கலைநிகழ்ச்சி

ஆசிரியர் கண்ணதாசன் அவர்களின் அன்னையார் மறைவு காரணமாக ஒத்திவைக்கப்பட்டிருந்த தென்றல் கலை நிகழ்ச்சி, நவம்பர் 3-ம் நாள், ஞாயிற்றுக்கிழமை சென்னை, தியாகராய நகர் வாணிமகாலில் நடைபெறும்.

நிகழ்ச்சிமூலம் கிடைக்கும் தொகை முழுதும், பன்மொழிப் புலவர் பொன் விழாவுக்கு அளிக்கப்படும்.

முன்னரே டிக்கட்டுகள் வாங்கியுள்ள தோழர்கள், அக்டோபர் 15 க்குமேல் 'தென்றல்' அலுவலகத்தில், அல்லது டிக்கட்டுகள் வாங்கிய தோழர்களிடம் அவற்றிற்குப் பதிலாகப் புதிய டிக்கட்டுகள் வாங்கிக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

முல்லை

அடுத்த "முல்லை" அக்டோபர் முதல் வாரத்தில் எங்கும் கிடைக்கும்.

★ **இலக்கியமும் சமுதாயமும்**—ஆராய்ச்சித் தெளிவுரை.
★ **ஏன் ?**—மனோதத்துவம்-கலீல்கிப்ரான் மூலம்.
★ **கன்னடியன் சண்டை**—திராவிட இலக்கியங்களின் ஒற்றுமை கூறும் கட்டுரைக் கருவூலம்.
★ **திருகுப் பூ !**—சுவையான சம்பவங்கள் நிறைந்த குறுநாவல்.
★ **குறி !**—மீனவர் குலத்தில் அரும்பி மலர்ந்த அருமையான காதல் கதை.
★ **ஆவிகலந்த அழகி**—காதல் கவிதை.

மற்றும்

★ **ஆசிரியர் கண்ணதாசன்** எழுதும் **ஆட்டனத்தி - ஆதிமந்தி**-காவியம்.

"முல்லை" : : சென்னை-6.

— 6ம் பக்கத் தொடர்ச்சி —

வலது கரத்தின் வலிமையையும் பொறுத்துக்கொண்டு குதிரையை அழுத்திவிட்டான்.

கவிந்த புகை கலைந்தபோது, எதிரி வேதனை தாங்காமல் துடித்துக்கொண்டிருந்தான். இன்னும் அவன் கீழே விழவில்லை; இருந்தாலும் அவனுடைய கால்கள் பின்னிக்கொண்டுசுற்றிச்சுற்றி வந்து தடுமாறிக்கொண்டிருந்தன. கையிலிருந்த துப்பாக்கி கீழே நழுவி விழுவதற்குமுன் ஒரு தடவை அவன் குறி வைத்தான். ஆனால் விழுந்துகொண்டிருந்த துப்பாக்கியினின்றும் பாய்ந்த குண்டுகள் உளவுக்காரியின் முகத்தில் ஊடுருவிச் சென்றன. கொஞ்ச நஞ்சம் இருந்த குற்றுயிரும், அவன் கீழே விழுந்தபோது அவனை விட்டுப் பிரிந்துவிட்டது,

கண்ணெதிரில் அதைவிடக் கொடூரமான பல செயல்களை தானே செய்திருக்கிறான் அவன். ஆனால் எதிரியின் உயிர் அணு அணுவாகப் பிரிந்துகொண்டிருந்ததைக் கண்டபோது, அவன் இதயம் வேதனையால் விம்மியது. அவனையறியாமல் அவனுடைய விழிகளில் கண்ணீர் முத்துக்கள் உருண்டோடின. போரை நினைத்தபோது அவன் உள்ளம் நடுங்கியது. புகையை உமிழ்ந்துகொண்டிருந்த கைத்துப்பாக்கியை இனி தொடுவதில்லை என்று உறுதி செய்துகொண்டான். கொன்று குவிக்கும் வீரனாக இருப்பதைவிட அமைதியைக் காக்கும் கோழையாக இருப்பது எவ்வளவோ மேல் என்று எதிரொலித்தது அவன் உள்ளம். அமைதிக்காக உயிரை விடவும் துணியும் அளவுக்கு அவன் உள்ளத்தைப் பண்படுத்திவிட்டது எதிரியின் சடலம்.

பையிலிருந்த கைத்துப்பாக்கியை உறையில் போட்டுக்கொண்டான். நடந்தவற்றை அதிகாரியிடம் கூறிவிட அவன் துடித்துக்கொண்டிருந்தான். இப்பொழுது அவனைச் சுற்றிலும் அமைதி அரண் செய்துகொண்டிருந்தது.

தெருவின் திருப்பத்தை அடைந்துகொண்டிருந்த அவனுக்கு, ஒரு காலத்தில் ஒரே இராணுவத்தில் இருந்து, இப்பொழுது தன்னால் சுடப்பட்டு, சுருண்டு விழுந்த அந்த எதிரியை ஒரு முறை பார்க்க வேண்டும்போல் தோன்றியது. ஒரு வேளை ஏன் அவன் தனக்குத் தெரிந்தவனாகக்கூட இருக்கக் கூடாது என்று எண்ணியது அவன் உள்ளம். ஓ'கேனல் பகுதியைத்தவிர அவனைச் சுற்றிலும் இருந்த இடங்களில் துப்பாக்கியின் ஒலிகள் முழங்கிக்கொண்டிருந்தன. எந்த நேரத்திலும், குண்டுகள் தன்மீது பாய நேரிட்டாலும் நேரிடும்; இருந்தாலும் அவன் எதற்கும் அஞ்சவில்லை. எதிரியின் சடலத்தை நோக்கி அவன் கால்கள் வேகமாக நடந்தன.

தரையில் கவிழ்ந்து கிடந்த அந்த சடலத்தை மெல்லப் புரட்டினான். முகத்தைப் பார்த்தபோது அவன் கல்லாய்ச் சமைந்துவிட்டான், அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை!

உடன்பிறந்தவனின் உயிர், பிரிந்துவிட்டாலும் இன்னும் அவன் விழிகள் ஒளியை இழக்கவில்லை!

மூலம் : **ஓ'பிளார்த்தி**
தமிழில் :
இரா. கோதண்டராமன்

— 2ம் பக்கத் தொடர்ச்சி —

கம் அந்நாடுகளுக்கு அனுப்பியதாக அறிகிறோம். அது மட்டுமன்று, புதுக்கற்கால நாகரிகத்திலேயே அவ்வெல்லா நாகரிகங்களும் நிலவிய அத்தொல்பழங் காலத்திலே, தமிழகம் மட்டும் தங்கச்சுரங்கம் மட்டுமின்றி, இரும்புச்சுரங்கங்களும் அகழ்ந்து, இரும்புக்கருவிகளும் வழங்கத் தொடங்கியிருந்ததாக அறிகிறோம்.

கைத்தறியும் இராட்டினமும்-அறவுருவான காந்தியார் போற்றிய கீழ்திசையின் பழஞ்செல்வங்கள்-நெசவுத்தொழிலும் உழவும் பழங்காலத்திலேயே-இருபதினாயிரம் நாற்பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே தமிழகத்தில் வழங்கின என்பதை மைசூர் இராயலசீமா பகுதிகளில் கல்நிலங்களில் அகழ்ந்து காணப்படும் கல்லறை மாடங்கள் காட்டுகின்றன.

இத்தனையும் மேல் திசைத் தொடர்புகள். இவற்றுக்குப் பழமையிலோ பெருமையிலோ பிற்பட்டனல்ல கீழ்திசைத் தொடர்புகள். தமிழ்மொழியே இவற்றையும் குறித்துக்காட்டுகிறது.

சங்க இலக்கியமும், சிலம்பு மேகலைகளும், தொல்காப்பியமும் காட்டுகின்றன - இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகத்தின் தென் எல்லை குமரி முனையல்ல என்பதை! திருந்திய தமிழ் பேசப்பட்ட தமிழ் நல் உலகு அல்லது செந்தமிழ் நிலமே வடக்கே வேங்கட முதல் தெற்கே குமரியாறு வரை பரந்து கிடந்தது என்று அறிகிறோம். செந்தமிழகத்திற்கு வடக்கேயும் தமிழகம் விந்தம் வரை பரவியிருந்தது போல, குமரியாற்றுக்குத் தெற்கேயும் தமிழகம் பரவியிருந்தது! ஏனெனில் பாண்டியர் தலைநகரமே குமரியாற்றுக்குத் தெற்கே, பாண்டியன் வெட்டித் திருத்திய பண்டைய புத்தாறாகிய பஃறுளி ஆற்றின் கரையில்-தமிழ்ப் பெயரையே கொண்ட ஆற்றின் கரையில் - இருந்தது. அதன் பெயர் இன்றைய மதுரையின் பெயரே-இன்றைய மதுரை வடமதுரை என்றும் அது தென்மதுரை என்றும் வழங்கிற்று.

பழய தமிழகத்தில் இன்றைய இலங்கை ஒரு பகுதி. இதை யவன உரோமர் குறிப்புக்களே சுட்டிக்காட்டுகின்றன. தமிழகத்தில் ஓடும் தாம்பிரபரணி - தண்பொருநை - அன்று இலங்கை வழியாக ஓடிற்று. இலங்கையில் அது ஓடிய படுகையையும் விழும் இடத்தையும் இன்றும் காணலாம் என்று டாலர் கூறியுள்ளனர். செந்தமிழ் பேசும் மக்கள் பழைய செந்தமிழ் நாட்டெல்லையாகிய இப்பகுதிவரை இன்றும் வாழ்கின்றனர் - ஈழத்துத் தமிழ்ப் பெரும்புலவர் யாழ்நூல் இயற்றிய விபுலானந்த அடிகள் பிறந்த ஊர் பண்டைச் செந்தமிழ் மாநிலத்தின் இத்தென் கிழக்கோடியிலேயே உள்ளது.

கொங்கு-ஈழம் இந்த இரண்டு சொல்லுக்கும் தமிழில் பொன் என்ற பொருள் உண்டு. பொன்னுறே பொன்னியாகிய காவிரி! வடபெண்ணை, தென்பெண்ணை, வடவெள்ளாறு தென்வெள்ளாறுபோல, பண்டு வட பொன்னி, தென்பொன்னி ஆறுகள் இறந்திருக்கலாமோ என்று கூடக்கருதலாம். ஏனெனில் இலங்கையில் இடைக்காலத்தில் சோழர் எழுப்பிய தலைநகரம் பொலனறுவாவிலும் ஈழம் என்ற இச்சொல்லின் பொருள் தொனிக்கிறது. இரு பொன்னிகளும் ஓடிய நிலங்களின் பெயர்களும் இதற்கேற்ப ஒருமையுடையவையாய் இருக்கின்றன. காவிரிக்கு வடக்கிலுள்ள தமிழகம் பண்டு அருவா என்றும் மாவிலங்கை என்றும் அழைக்கப்பட்டிருந்தது. ஈழம் தென்அருவா அல்லது பொன்அருவா வாசலும், தென்னிலங்கை அல்லது சிறு இலங்கையாகவும் பெயர் பெற்றிருத்தல் இயல்பு.

பழந்தமிழ் நாகரிகம் பல திசையில் கெடாது பேணும் மலையாள மக்களுக்கும், இலங்கை வாழ் தமிழர் மட்டுமின்றி இலங்கை வாழ் சிங்களருக்கும் பல ஒப்புமைகள் மொழியில், பழக்க வழக்கங்களில், பண்பாட்டில் இன்றும் காணப்படுகின்றன. இவற்றை நாம் தென்கிழக்காசியா எங்குமே காணலாம். தாம் வானவர் மரபினர், சிங்க மரபினர் என்ற வழிவழிக் கதைகள், பண்டைத் தமிழர் சங்க காலம் வரை வழங்கியிருந்த வண்ணப் பூவாடைகள், தலைமுடியின் ஐம்பால் சிங்காரிப்பு, பெண்கள் மணஉரிமை, கைகால்களுக்குச் சாயம் தோய்த்தல், கண்ணுக்கு மையிடல், முகமூடியும் கவசமுமிட்ட நடன நாடக அரங்குகள், கோயில் வகைகள் ஆகியவை இவற்றுள்சில. மலையாளம்என்ற பெயரிலுள்ள மலை மாலத் தீவிலும், மலாயாவிலும், சுமாத்ராத் தீவின் பழைய நகரமான மலையூரிலும் இடம் பெற்றிருக்கின்றன.

தொடரும்

காகமும் கோழியும்

உருவகம்

அந்த வீட்டைச் சேர்ந்த மரத்தில், நெடுநாட்களாக ஒரு காகம் வாழ்ந்துவந்தது. ஒருகுறிப்பிட்ட நேரத்தில் தனக்குத்தேவையான உணவுக்காக வெளியே அலைந்து திரிந்து, வேண்டியமட்டும் சேர்த்துக்கொண்டு, உடனேயே மரத்துக்குத் திரும்பி விடுவது அதற்கு வழக்கமாகி விட்டது. இதனால் அது பெரும்பகுதி நேரத்தை, மரத்திலேயே கழிக்க வேண்டியிருந்தது. அப்பொழுதெல்லாம், மகிழ்ச்சியோடு உரையாடிக்கொண்டிருக்க ஒரு நல்ல நண்பன் இல்லையே என்று வருத்தப்பட்டது காகம்.

ஒரு நாள் காலை கொழுத்த, அழகிய கோழி ஒன்று காகத்தைப்பார்த்து மரத்தை நோக்கி வந்தது. தன்னோடு புதிதாகப் பேச வருகிற அந்தக்கோழியை முழுமனதுடன் வரவேற்ற காகம், அன்போடு கேட்டது:

“அருமை நண்பனே! நீ எங்கிருந்து வருகிறாய் என்று நான் அறிந்து கொள்ளலாமா?”

“இந்தக் கேள்வியை நானல்லவா கேட்டிருக்க வேண்டும்! நீ இங்கே எப்படி வந்தாய்? எவ்வளவு நாட்களாய் வாழ்கிறாய்?” என்று பதிலுக்குக்கேட்டு விட்டு, அலட்சியமாகப் பார்த்தது கோழி.

தான் அங்கே பல காலமாக இருப்பதைப் பணிவாகக்கூறிவிட்டு, கோழி அங்கு வந்து சேர்ந்த விவரத்தைக்கேட்டது காகம்.

வீட்டுக்காரனால், தான் முதல்நாள் சந்தையில் வாங்கப்பட்டதையும், அதற்கு முன் தான் வாழ்ந்த இடத்தைப் பற்றியும் சொல்லிவிட்டு, தனக்கே காகத்தைவிட அங்கு உரிமை அதிகமிருப்பதாகச் சொல்லிக்கொண்டது கோழி.

கோழியோடு சண்டை பிடித்துக்கொள்ளப் பிரியப்படவில்லை காகம். நெடுநாட்களுக்குப்பிறகு ஏதாவது பேசிக்கொண்டிருக்க ஒரு ஆளாவது அகப்பட்டதே என்ற எண்ணத்துடன், மிக்கசமாதானமான முறையில் அதற்குப் பதில் சொல்லியதோடு, கோழியின் வருகையால் தனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொண்டது.

எப்படியோ அவை இரண்டும் அன்று முதல் நண்பர்களாகிவிட்டன. ஓய்வு நேரம் முழுவதும் இனிமையாகப் பேசுவதிலேயே ஓடியது. ஆனால், அப்படிப் பேசும்பொழுதெல்லாம் கோழி, தான் காகத்தை விட உயர்ந்த நிலையில் இருப்பதை நேர்முகமாகவும், மறைமுகமாகவும் பலமுறை எடுத்துக்காட்டத்தவற வில்லை.

அன்று அவை சந்தித்துப்பேசிய போது, கோழி அதனுடைய உணவு நிலை பற்றி விசாரித்தது.

நாள் முழுவதும் வெளியில் சுற்றி தான் உணவுதேடுவதைச் சொல்லி வருத்தப்பட்டுக்கொண்டது காகம்.

அதைக்கேட்டதும் கேலியாகச் சிரித்து விட்டு, கோழி சொல்லிற்று :

“கவலைப்படவேண்டிய அவசியமே எனக்குக் கிடையாது! முன்பு இருந்த இடத்திலும் சரி, இங்கும் சரி எனக்குத்தேவையான உணவை அவர்களே தந்து விடுகிறார்கள். உன்னைப்போல் ஊர் சுற்றிப்பொறுக்குவது எவ்வளவு கேவலமானது!”

காகம் பதில் பேசவில்லை; அமைதியாக இருந்து விட்டது.

அடுத்த இரண்டாம் நாள் மாலை. அன்று முழுவதும் கோழியைக்காண முடியாமல், சிரமப்பட்டுப் பொழுதை ஓட்டிக்கொண்டிருந்தது காகம். பிறகு அந்தப்பக்கம் முழுவதும் தேடி அலுத்து விட்டு, கைப்பிடிச்சுவரில் உட்கார்ந்து கொண்டு, வீட்டையே பார்த்துக்கொண்டிருந்தது. யார் யாரோ புதிய ஆட்கள் நடமாடிக்கொண்டிப்பதைப் பார்த்த காகம், சமையலறையில் வீட்டுக்காரனும், அவனது மனைவியும் தனியாகப்பேசிக்கொண்டிருப்பதைக் கவனித்துக் கேட்டது.

ஊரிலேருந்து சொந்தக்காரர்கள் வந்திருக்காங்களே, என்ன சமையல் பண்ணப்போறே ?” என்று கேட்டான் அவன்.

“காலையிலேயே கோழியைப்புடுச்சு அடச்சு வச்சிருக்கேன். இன்னிக்கு அதுதான் விருந்து !” என்றாள் அவள்.

‘அதுக்குநல்லா தீனிபோட்டுவைண்ணு, அதனால்தான் நான் உனக்கு முன்னேயே சொல்லிவச்சேன்!” என்ற அவனது குரல் தெளிவாகக்கேட்டது.’

கோழியை நினைத்துக்கண்ணீர் வடித்துக்கொண்டே தனது இருப்பிடம் சென்றது காகம்.

—ப. புகழேந்தி.

வெண்பாப் போட்டி

4. கலைவாணர் இல்லாக் கலை.

★ கண்ணில் குருடனாய்க் கையிழந்த சிற்பியாய்
மண்ணைப் பறிகொடுத்த மன்னவனாய்-வண்ணம்
கலைந்திட்ட சித்திரமாய் காணும் சிரிப்புக்
கலைவாணர் இல்லாக் கலை.

—எம். பி. கண்ணன், சென்னை-12.

உள்ளம் சிரிக்கும்! உடல்சிரிக்கும்! சீர்திருத்த
வெள்ளம் சிரிக்கும் விறல்நடிகர்-வள்ளல்
மலைசாய்ந்து வெற்றிடமாய் மாறியதே, இன்று
கலைவாணர் இல்லாக் கலை.

—நாவுக்கரசன், காரைக்குடி.

அண்ணா உரையில்லா மாநா(டு) அருங்கலையின்
கண்ணாம் கிருஷ்ணன்இல் லாமதுரம்-உண்ண
உலைவாய்க் குதவாத ஒள்ளரிசி போலாம்
கலைவாணர் இல்லாக் கலை.

—கி. கண்ணப்பன், கண்டாச்சிபுரம்.

சிந்தனையைத் தூண்டும் சிரிப்பால் நமையீர்த்த
செந்தமிழ்ச் செல்வரவர் சென்றுவிட்டார்-அந்தோ
தலையில்லா முண்டமடா தம்பீ உலகில்
கலைவாணர் இல்லாக் கலை.

—ஆர். தியாகராசன், திருச்சி-2.

கற்றவர்கள் இல்லாக் கவியரங்கும் மக்கள்தமைப்
பெற்றவர்கள் இல்லாப் பெருவாழ்வும்-முற்றும்
தலையாய பண்பில்லா தார்நட்பும் போலாம்
கலைவாணர் இல்லாக் கலை.

—சி. நீலகண்டன், சென்னை-6.

நாட்டில் கலைவளர்த்த நல்லதம்பி போயினபின்
தீட்டும் கலைகள் திரையுலக-மேட்டில்
அலைந்தாலு மின்ப மளிக்குமோ அன்புக்
கலைவாணர் இல்லாக் கலை.

—சி. பி. சாமி, அரக்கோணம்.

மதியற்ற வானும் மணமற்ற பூவும்
நிதியற்ற வாழ்வும் நிகராம்-மதியால்
நிலைபெற்ற பேரோன் கிருட்டினன் என்னும்
கலைவாணர் இல்லாக் கலை.

—வசந்தா, கடத்தூர்.

வட்டநிலா இல்லாத வானம் இருளடைந்தும்,
பொட்டிழந்த மங்கை பொலிவிழந்தும்-விட்ட
நிலையாகிப் போவதினி நிச்சயம்என். எஸ். கே.
கலைவாணர் இல்லாக் கலை.

—பி. செகன்னாதன், சென்னை-12.

சேற்றில் பிறந்தும் சிறப்பெய்து தாமரையை
ஏற்றின்பம் காணும் இளங்கதிர்போல்-தோற்றி
கலையாற் கருத்தெனக்கு ஈவார்யார்; கொல்லும்
கலைவாணர் இல்லாக் கலை.

—பா. சு. மணியன், முத்தூர்.

சீர்குலைந்த என்னைச் சிரிப்பால் நடிப்பினால்
ஏர்பெருகச் செய்தோன் இறந்தனனே-யார்பின்
கலைவளர்ப்பா ரென்றே கலங்கி அழுகிறதே
கலைவாணர் இல்லாக் கலை.

அ. அப்துல்கரீம், திருவையாறு.

கலைசேர் நகைநின்று, கன்னற் சுவையாக்கி,
விலைசேர் நலனாக்கி, வாழ்வாக்கி-மலையாய்
நிலைபெற்று நெஞ்சில் நலன்கொளுமோ நன்றே
கலைவாணர் இல்லாக் கலை.

—செ. வரதராசன், கள்ளக்குறிச்சி.

விலைகொள்ளாச் செல்வமென வீற்றிருக்கும், கன்னி
கலையரங்கம் தென்குமரிக் கண்டம்-சிலைகொள்
நிலவில்லா வானொக்கும் நேர்மை நிகர்த்த
கலைவாணர் இல்லாக் கலை.

—சி. ச. மாணிக்கம், சிக்கராயபுரம்.

பண்ணிசைக்கப் பாடகர்நற் பாட்டிசைக்கப் பாவலர்கள்
வண்ணப் படம்வரைய வல்லுநர்கள்-எண்ண
அலையார் கதையாளர் ஆம்இவரா? என்னும்
கலைவாணர் இல்லாக் கலை.

—சி. தெ. இளமுருகு சென்னை-12.

வாளில்லா வீரனும் வாகைமலர்ச் சூடுவனோ?
கோளில் பொறியில் குணமுண்டோ?-கேளீர்!
இலையுதிர்ந்து பட்டமரம் என்றநிலை யாகும்
கலைவாணர் இல்லாக் கலை.

—பி. பெருமாள்,

ஊட்டுதற்குத் தேனும் உளம்விரிய நன்மருந்தும்
வாட்டும் வறுமைக்கோர் வாட்படையும்-நாட்டில்
இலைமறைத்த காய்களையும் எப்போது காட்டும்
கலைவாணர் இல்லாக் கலை.

—ப. கணபதி, சோழபுரம்.

மணமில்லா மல்லிகையும் மக்களில்லா வீடும்
பணமில்லா பார்வாழ்வும் அந்தோ!-துணமே
நிலைதலையும் உப்பில்லா நெய்யுணவும் ஒக்கும்
கலைவாணர் இல்லாக் கலை.

—ஆ. தங்கவேலு, பொன்மலை.

ஒளியில் விளக்கும், உணர்விலா நெஞ்சும்
களியில் விழாவும், கருத்தில்-மொழியும்
நிலையாது போனதுபோற் போயிற்றே நந்தம்
கலைவாணர் இல்லாக் கலை.

—கதிரவன், அண்ணாமலை நகர்.

தெள்ளுதமிழ்க் காட்டில் இனிக்கும் கனிதந்த
வள்ளல் நகைமரம் சாய்ந்ததுவே!-துள்ளும்
தலையற்ற முண்டமாய் ஆயதுவே காண்பீர்
கலைவாணர் இல்லாக் கலை.

—தே. ஹேரீஸ் ஹில்டன், தாழையூத்து.

சிந்தனைசெய் திமையொழி சீர்திருந்து நன்குசிரி
முந்திவளர் என்றுரைத்த முத்தமிழர்-தந்தை
சிலையானார் முத்தில்லாச் சிப்பியினி எங்கள்
கலைவாணர் இல்லாக் கலை.

—கலைச்செல்வன், சோழபுரம்.

கலைவளர நாட்டில் நலம்வளரும் என்று
நிலைநிறுத்த நின்றநல்லார் மாய்வால்,-உலையில்
நிலைகலங்கிக் கொந்தளிக்கும் கூழ்போல் கொதிக்கும்
கலைவாணர் இல்லாக் கலை.

—எஸ். கே. சாகுல் அமீது, சென்னை-1.

கண்ணாம் கணவன் தனையிழந்து என்னாளும்
புண்ணாகி நெஞ்சம் புலம்பலுறும்-பெண்ணின்
பொலிவற்ற தோற்றம்போல் பொற்பிழக்கும் மன்னர்
கலைவாணர் இல்லாக் கலை.

—சொ. இராமச்சந்திரன், பேரூர்.

தப்புடைய சொல்லும் தகுதுணையில் லாமனையும்
ஒப்பிலா நற்றலைவன் இல்வழியும்-செப்பும்
நிலையிலா வீடேபோல் நிற்குமே கண்டீர்
கலைவாணர் இல்லாக் கலை.

—ஆர். ஐயலு, பொன்மலை.

★ பரிசு பெற்ற வெண்பா.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணாசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2|127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு